Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி-27 11-07-2005 திங்கட்கிழமை ஓசை 143



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-12401) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரி ஆண்டு நிறைவு நிகழ்வில் தேசியத் தலைவர்






நேற்றுமுன்தினம் இடம் பெற்ற விடுதலைப் புலிகளின் படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் 10ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார். இந்நிகழ்வில் படையத் தொடக்கப் பயிற்சிக்கல்லூரியினால் வெளியிடப்பட்ட இரு நூல்களையும் தேசியத்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை-உப்புவெளிப் பகுதியில்

# இரு போராளிகள், துணைப்படை வீரர் உட்பட நால்வர்

# சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதலில் பலி!

## மேலும் ஒரு பொதுமகன் காயம்

(திருகோணமலை)

**திருகோணமலை உப்புவெளி எனும் இடத்தில் நேற்றுக்காலை கட்டடம் ஒன்றில் தங்கியிருந்த போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இரு போராளிகள், துணைப்படைவீரர் ஒருவர் உட்பட நால்வர் பலியாகினர். பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.**

காலை 10.45 மணியளவில் வெள்ளை நிற வான் ஒன்றில் வந்த பத்திற்கும் பதினைந்திற்கும் இடைப்பட்ட கறுப்பு உடை அணிந்த இராணுவத்தினரே இத்தாக்குதலை நடத்தியுள்ளனர். இவர்கள் அனைவரும் கறுப்புத் துணியால் முகத்தை மூடியிருந்தனர்.

சம்பவம் இடம்பெற்ற வேளை அக் கட்டடத்தில் இரண்டு போராளிகள் உட்பட ஏழுபேர் இருந்துள்ளனர். வாகனத்தில் இருந்து இறங்கிய இராணுவத்தினர் இவர்கள்மீது கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியதுடன் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகத்தையும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் கொலையையடுத்து திருமலையில் தமிழ் மக்கள் சீற்றம்

(திருகோணமலை)

நேற்று திருகோணமலை உப்பு வெளியில் போராளிகள் மீது நடாத்தப்பட்ட தாக்குதலையடுத்து தமிழ் மக்கள் பெரும் சீற்றமடைந்துள்ளனர். அப்பகுதிக்கு வந்த இராணுவத்தினரைத்தாக்க பொதுமக்கள் முயன்றதுடன் அவர்களை விரட்டியடித்துள்ளனர்.

பின்னர் சிறிலங்காப் பொலிசார் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அத்துடன் போராளிகளின் வித்துடல்கள் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டவேளை அப்பகுதியில் நின்ற சிறிலங்கா புலனாய்வுப் பிரிவினரை இனம் கண்ட மக்கள் அவர்களைத் தாக்குவதற்காகத் துரத்தியதாகவும் தெரியவருகின்றது.

## போராளிகள் மீதான தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவமே முழுப்பொறுப்பு

### -கண்காணிப்புக் குழுவிடம் எழிலன் முறையீடு

(திருமலை)

உப்புவெளி- செல்வநாயகபுரத்தில் விடுதலைப்புலிப் போராளிகள் மீது நேற்றுப்பகல் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு சிறிலங்கா இராணுவமே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலைத் தலைவர் ஆர்தர்டுவீட்டனிடம் தெரிவித்துள்ளார்.

நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள்இயக்கத்தைச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வித்துடல்கள் விதைக்கப்படும் வரை இன்றுமுதல் திருமலையில் ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலை- செல்வநாயகபுரத்தில் விடுதலைப்புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தோரின் வித்துடல்கள் விதைக்கப்படும் வரை இன்று முதல் திருகோணமலை நகரில் பூரண ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படுமென்று திருகோணமலை மாவட்டத் தமிழ்மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது; இனந்தெரியாத நயவஞ்சகக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன்குண்டுத் தாக்குதல் தொடர்பில் "பாலா" வைக் கைது செய்ய வேண்டுமாம்

### -ஹெல உறுமய பிரித்தானியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

லண்டனில் நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை கைது செய்யவேண்டுமென ஜாதிகஹெல உறுமய பிரித்தானியாவை கோரியுள்ளது. லண்டனில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அல்-ஹைதா அமைப்பு உரிமை கோரியுள்ளது.இந்தநிலையில் அல்-ஹைதா அமைப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகளும் தொடர்புகளை கொண்டிருப்பதால் அன்ரன் பாலசிங்கத்தை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச அளவில் எமது தேசம் பற்றிய அபிப்பிராயத்தை மாற்றமுறச் செய்தது

### வடக்கு–கிழக்கு மனித உரிமைச் செயலகத்திற்கு சு. ப.தமிழ்ச்செல்வன் பாராட்டு

(கிளிநொச்சி)

எமது தேசம்பற்றிய அபிப்பிராயத்தைச் சர்வதேச அளவில் மாற்றமடையச் செய்ய வடக்குக் கிழக்கு மனித உரிமைச்செயலகம் பெரிதும் உதவியது.

இவ்வாறு அரசியல்துறை பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். நேற்று வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலக ஆண்டு விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; இன்றைய நாளில் எமது தமிழீழத்தேசத்தின் மனித உரிமைச் செயலகம் தொடங்கி ஓர் ஆண்டை நிறைவு செய்திருக் கின்றது. இந்த நாளை ஒட்டி எங்களுடைய தேசியத் தலைவர் சார்பாகவும், எமது அமைப்பின் சார்பாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.கலாச்சார அபிவிருத்தி நடவடிக்கைக்கு அரசால் நிதிஒதுக்கீடு செய்யப்படுவதில்லை


### -நல்லூர் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கலாச்சார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை என நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. சு.தெய்வேந்திரம் கூறியுள்ளார்.

தமிழர் கலாச்சாரத்திற்கு புகழ் பெற்ற இடமாக யாழ்.குடாநாடு காணப்படுகின்றது. இங்கு தலை சிறந்த கலைஞர்களும், கலாச்சாரப் பண்பாட்டு அம்சங்களும், நினைவுச்சின்னங்களும் உள்ளன.

எனினும் இத்தகைய கலை கலாச்சார அம்சங்களையும், கலைஞர்களையும் பேணிப்பாதுகாத்து அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கமோ அல்லது கலாச்சார அமைச்சோ போதியளவு நிதிஒதுக்கீட்டைச் செய்வதில்லை. இதனால் யாழ். குடாநாட்டின் கலைகலாச்சார அபிவிருத்தி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் நல்லூர் பிரதேச செயலர் மேலும் கூறினார் (33)





"சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஒன்றிணைந்து எழுவோம்" என்ற தலைப்பில் கிளிநொச்சி கல்விவலயத்தில் நான்கு கோட்டங்களை உள்ளடக்கி இசை, நடனம், நாடகம் ஆகிய போட்டிகள் நேற்று முன்தினம் கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

இதில் கண்டாவளை கோட்ட பாடசாலை கனிஷ்ட பிரிவு மாணவர்களின் இசை ஆக்கப்பாடலை இசைக்கும் மாணவிகளை முதலாவது படத்திலும், நாடகத்தின் ஒரு காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்:-குகன், பிரதீபன்)

# மீள்குடியமர்வு பாதயாத்திரையை தடுத்தால் மக்கள் போராட்டங்கள் வெடிக்கும்!

### -இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்க சமாசத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வு கோரிக்கைகளை வலியுறுத்தி யாழ்.வலிகாமம் வடக்கு மக்கள் மேற்கொள்ளும் பாதயாத்திரையினை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் வரை செல்லவிடர்து படையினர் தடுத்து நிறுத்தினால் பெருமெடுப்பிலான மக்கள் போராட்டங்கள் வெடிக்குமென இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சங்கசமாசத் தலைவர் ந.கணேஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்.வலிகாமம் வடக்கு மக்கள் தமது வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தை வெளியேறக்கோரியும், தம் மீள் குடியமர்வை வலியுறுத்தியும் எதிர் வரும் 15 ஆம் திகதி மாபெரும் பாதயாத்திரையினை நடத்தவுள்ளனர்.

மருதனார் மடத்திலிருந்து வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் வரை இந்தப் பாதயாத்திரை நடைபெறவுள்ளது.

எனினும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயம் பாதுகாப்பு வலயத்துள் இருக்கிறது என்பதை காரணம் காட்டிபடையினர் பாதுகாப்பு வலயத்தின் தெல்லிப்பழை நுழைவாயிலில் வைத்து பாதயாத்திரையாக செல்லும் மக்களை தடுத்துநிறுத்தி திருப்பி அனுப்ப முற்பட்டால் அங்கு படையினருக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் வெடிக்கும் என்றும் இதனை எவராலும் தடுக்க முடியாது என்றும் அவர் மேலும் எச்சரித்தார். (33)

# வேப்பமரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வேப்பமரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் யாழ்.ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் ஆனைக்கோட்டை முள்ளி வீதியைச் சேர்ந்த கந்தசாமி -மகேஸ்வரன் (வயது-33) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மரம் தறிக்கும் தொழிலில் ஈடுபட்டுவரும் பிரஸ்தாப நபர் நேற்றும் வழமை போல ஆனைக்கோட்டை பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றினுள் நிற்கும் வேப்பமரத்தில் ஏறி கிளைகளைத் தறிக்க முற்பட்டபோதே அவர் மரத்திலிருந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதபரிசோதனைகளின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (33)

# குடும்ப வறுமை காரணமாக மாணவர்களின் வரவு வீழ்ச்சி

(தென்மராட்சி)

மட்டுவில் பகுதியில் வறுமையின் காரணமாக மாணவர்களின் பாடசாலை வருகை வீழ்ச்சியடைந்துள்ளன. இந்நிலைமையை மாற்ற சமூக அமைப்புக்கள் முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டுவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள், வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே பாடசாலை செல்வதாகவும், மீதி நாட்களில் குடும்பவறுமை காரணமாக கூலிக்கு மண் சுமக்கும் வேலைகளுக்குச் சென்று விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அவல நிலை குறித்து கவலையும் வேதனையும் அடைந்துள்ள நலன்விரும்பிகள், சமூக அமைப்புக்கள் மாற்று நடவடிக்கைகளை எடுத்து [illegible] தமது கல்விச் செ[illegible]பாடுகளை மாணவர்கள் மேற்[illegible]ள்ள நடவடிக்கை எடுக்க [illegible]வண்டுமென கோரியுள்ளனர்.

குடும்பவறுமையின் காரணமாக மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள இச்சமூக அநீதி களையப்பட வே[illegible]டும் எனவும் கோரிக்கை விடு[illegible]ப்பட்டுள்ளது. (28)

# அளவெட்டிப் பகுதியில் மிதிவெடியகற்றல்

யாழ்.அளவெட்டி மத்திப் பகுதியில் படையினரிடம் இருந்து மீட்கப்பட்ட பிரதேசத்தில் இருக்கும் மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளை "ஹலோட் ரெஸ்ட்" அமைப்பினர் மேற்கொண்டு வருகின்றனர்.

அளவெட்டி மத்தியில் இருக்கும் பலபிரதேசங்களைப் படையினர் மக்களின் மீள்குடியமர்வு மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு அனுமதித்துள்ள போதும் அங்கு அவர்களால் புதைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றவில்லை.

இதனால் அங்கு பொதுமக்கள் மீளக்குடியமரவோ அல்லது விவசாயம் செய்யவோ முடியாத நிலைகாணப்பட்டது.

இதனைக் கவனத்தில் கொண்டு மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைத் தொடர்ந்தே இப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு வருகின்றன. (33)

## கல்லாரைக் கிராமம் அபிவிருத்தி செய்யப்படும்

(மல்லாகம்)

யாழ்.மல்லாகம் தெற்கு கல்லாரைக்கிராமம் நியாப் திட்டம் II இன் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

அந்த வகையில் இக்கிராமத்தில் சுயதொழில் ஊக்குவிப்பு, நீர்வளம்பேணும் நடவடிக்கைகள், விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற கிராமஅபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

மேற்படி கிராமத்தின் பின் தங்கிய நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே இந்நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.(33)

# 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



தாயின் மடியில்
08
09
1976

தாயக மண்ணில்
11
07
2001

**கப்டன் முல்லைச்செழியன்/சுடர்மணி**

**(ஜோசப் எட்வேட்–அலெக்ஸ் பிரதீபன்)**

சிப்பியில் பிறந்த முத்தாக
முல்லை.மண் உதித்த மூத்தவனே
எம் மண்ணின் விடிவிற்காய்
மட்டு நகரில் மடிந்தவனே
ஆண்டுகள் நான்கு ஓடிமறைந்தாலும்
உன்னை மறக்க முடியுமா?
நாம் எல்லாம் ஏங்கிப் பரிதவிக்க
எங்கே தான் போய் மறைந்தாய்

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

தகவல்: எ.றெக்ஷன்
(சகோதரன்)

(5949)

# பொதுக்கட்டமைப்பு இயங்க வேண்டி மடுமாதா ஆலயத்தில் விசேட வழிபாடு

(மன்னார்)

மன்னார் மடுமாதா திருப்பலிப்பூசை நேற்று இடம்பெற்ற போது அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுக்கட்டமைப்பு சிறந்த முறையில் இயங்க வேண்டுமெனக் கோரி விசேட வழிபாடு இடம்பெற்றுள்ளது.

இவ்வழிபாடு மன்னார் வாழ்வோதய நிறுவனத்தினரால் நடத்தப்பட்டது. இவ்வழிபாட்டில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து அரச,அரசசார்பற்ற பிரதிநிதிகள் உட்பட தென்பகுதியிலிருந்து வந்த மக்களும் ஈடுபட்டனர். (18)




## மின்சார விநியோகம்

யாழ்.மண்டைதீவுக்கு மின்சார விநியோகத்தை மேற்கொள்வதறகு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபையின் தீவகப்பகுதிக்கான பொறுப்பதிகாரி ஜேக்கப் செபஸ்தியான் பிள்ளை கூறினார்.

இதற்காக மண்டைதீவினை ஆட்சிப்படுத்தும் வேலணைப் பிரதேச சபையின் கீழ் சுமார் ஒரு மில்லியன் ரூபா செலவில் மண்டைதீவு பிரதேசத்துக்கான மின் விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (33)

# பிரித்தானியாவின் மற்றொரு நகரமான போமிங்ஹாமில் தாக்குதல் எச்சரிக்கை

## மக்கள் பாதுகாப்பு இடத்திற்கு வெளியேற்றம்

(லண்டன்)


**குண்டுத் தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து இங்கிலாந்தின் இரண்டாவது பெரிய நகரமான போமிங்ஹாமில் முக்கிய பகுதிகளில் இருந்து மக்கள் பாதுகாப்பான பகுதிக்கு வெளியேற்றப்பட்டனர்.**

போமிங் ஹாமிலிருந்து பாதுகாப்புப் படையினர் அவசர அவசரமாக ஆயிரக்கணக்கானோரை வெளியேற்றியதுடன் வெளியிலிருந்து வருவோரும் தடை செய்யப்பட்டனர். பலத்த தேடுதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

அண்மையில் லண்டன் நகரில் இடம்பெற்ற தொடர்ச்சியான குண்டு வெடிப்பை அடுத்து இடம்பெற்ற பாரிய தேடுதல் நடவடிக்கை இதுவாகும்.

குண்டுத் தாக்குதல் எச்சரிக்கையை அடுத்து நகரின் பொழுது போக்கு நிலையங்கள் உல்லாச விடுதிகள் என்பனவற்றில் இருந்து சுமார் முப்பதாயிரம் பேர் அப்புறப்படுத்தப்பட்டனர்.

பேருந்தில் குண்டு வெடிப்பிற்கான ஒத்திகை ஒன்று நடத்தப்பட்டது. நகரத்திற்கு மேலாக உலங்குவானூர்தி உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் நகரின் முக்கிய பகுதியில் அம்பியூலன்ஸ் வண்டிகளும் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.




லண்டனில் தீவிரவாதிகள் நடத்திய தொடர் குண்டுத் தாக்குதலையடுத்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள பிரிட்டிஷ் பொலிசார்.

## இராணுவ ஆட்சேர்ப்பு மையத்தில் குண்டு வெடிப்பு ஈராக்கில் 20 பேர் பலி;39 பேர் படுகாயம்

ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள இராணுவ தேர்வு மையத்தில் நேற்றுக்காலை இடம் பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 20 பேர் பலியாகியுள்ளதுடன் 39 பேர் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இராணுவத்தில் இணைவதற்காக சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இம்மாத தொடக்கத்தில் பொலிஸ்நிலைய தேர்வு மையத்தில் இடம் பெற்றிருந்த தற்கொலைத்தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஈராக்கில் உள்ள பிரிட்டிஷ் துருப்பினரை திரும்பப் பெற அதிகாரிகள் தீர்மானம்

ஈராக்கிலுள்ள ஆயிரக்கணக்கான துருப்புக்களை விலக்கிக் கொள்ள பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

தெற்கு ஈராக்கிலுள்ள பிரிட்டஷ் துருப்புக்களை குறைத்துக்கொள்வதற்கான திட்டங்கள் இருப்பதை பிரிட்டிஷ் பாதுகாப்பமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

## லண்டன் நகர் மீதான தீவிரவாத தாக்குதல்: அல் -ஹைறதா உறுப்பினரை ஒருங்கிணைக்கும் நடவடிக்கையே

### உளவு அமைப்புத் தகவல்

(லண்டன்)

உலகநாடுகளிலுள்ள அல்-ஹைறதா தீவிரவாதக் குழுக்களை ஒருங்கிணைப்பதற்காகவே லண்டனில் தொடர்குண்டு வெடிப்புக்கள் நடத்தப்பட்டுள்ளதாக லண்டனில் உள்ள உளவு நிறுவனம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அல்-ஹைறதா தீவிரவாத குழுக்களை உற்சாகப்படுத்துவதற்காகவும், ஜி-8 நாடுகளின் உச்சிமாநாட்டின் போது பிரதமர் ரொனிபிளேயர், ஜோர்ஜ் டபிள்யூ புஷ் ஆகியோருக்கு தலைகுனிவை ஏற்படுத்துவதற்காகவும் இந்தக்குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இதனிடையே லண்டன் நகரில் இயல்பு நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்த போதிலும் சுரங்க ரயில் பாதையில் ஏற்பட்ட குண்டுவெடிப்பு இடிபாடுகளில் சிக்கி மேலும் 50 பேர் உயிரிழந்திருக்கக் கூடுமென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டன் குண்டுவெடிப்பிற்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்கும் தேடுதல் வேட்டையில் லண்டன் உளவுத்துறையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

# ஆசிய நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொண்டு கொண்டலீசா ரைஸ் நேற்று சீனா பயணம்

(வோஷிங்டன்)



ஆசிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொண்டலீசா ரைஸ் சீனா சென்றுள்ளார்.

அணுவாயுதத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்ள வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ளமை குறித்து விசேடமாக சீன அதிகாரிகளுடன் ரைஸ் கலந்துரையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சீனா சென்றடைந்த ரைஸை சீன அதிகாரிகள் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர். ரைஸ் சீன சனாதிபதி மற்றும் பிரதமர் சென்சியா பாபோ உள்ளிட்ட அதிகாரிகள் பலரையும் சந்தித்துப்பேசவுள்ளார்.

சுமார் ஒருவருடங்களின் பின்னர் அணுவாயுதத் திட்டம் தொடர்பான பேச்சுவார்த்தையில் மீளக் கலந்கொள்வதற்கு வடகொரியா இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் கொண்டலீசா ரைஸ் சீனா அதிகாரிகளுடன் இது குறித்து கலந்துரையாடுகின்றார்.

வடகொரிய பிரதி வெளிவிவகார அமைச்சருக்கும், அமெரிக்க கிழக்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேச்சுக்களை அடுத்தே வடகொரியா தமது அணுத்திட்ட பிரச்சினை தொடர்பான ஆறு சுற்றுப் பேச்சக்களில் கலந்துகொள்ள இணக்கம் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொண்டலீசாரைஸ் சீனா, தென்கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகளின் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் இம்மாதம் 25 ஆம் திகதியளவில் மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகலாம் என்று அமெரிக்க சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தமது அணுத்திட்ட பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமாயின் அமெரிக்கா அது தொடர்பான சிறந்த பிரதிபலிப்பை விடுக்க வேண்டும் என்று வடகொரியா கடந்த மாதம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யூப்பிரட்டிஸில் தீவிரவாதிகளை கண்டு பிடிப்பதில் அமெரிக்கக் கடற்படை தீவிர நடவடிக்கை

(பாக்தாத்)

ஈராக்கின் யூப்பிரட்டிஸ் பள்ளத்தாக்குப் பகுதியில் தீவிரவாதிகளைத் தேடிக் கண்டு பிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அமெரிக்கக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளை முற்றாக வெளியேற்றும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இது மேற் கொள்ளப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இத் தேடுதல் நடவடிக்கையில் அமெரிக்கத் துருப்பினரும், ஈராக்கியத் துருப்பினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பலூஜாவின் தென் கிழக்குப் பகுதியிலிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிரைஸ்டான் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் சுமார் 22 சந்தேக நபர்களை தாம் தடுத்து வைத்திருப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது. சிரியாவின் எல்லைப் பகுதிக்கும் பாக்தாத்திற்கும் இடையில் அமைந்துள்ள யூப்பிரட்டிஸ் பள்ளத்தாக்கில் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் மறைந்திருந்து குண்டுத் தாக்குதல் நடத்துவதற்கு இது ஒரு கால் வாயாக அமைந்திருப்பதாக வோஷிங்டன் தெரிவித்துள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள தீவிரவாதிகளை முற்றாக ஒழிக்கும் நோக்கத்துடன் ஈராக்கின் மேற்குப் பகுதியிலுள்ள கடற்படையினர் கடந்த ஒரு வாரகாலமாக தேடுதல் நடவடிக்கையினை மேற் கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

## ஆறு தரப்பு பேச்சுக்கு வடகொரியா இணக்கம் அமெரிக்கா வரவேற்பு

(வோஷிங்டன்)

வடகொரியா அதன் அணுவாயுதத்திட்டம் தொடர்பாக ஸ்தம்பிதமடைந்துள்ள ஆறுதரப்பு பேச்சுகளுக்கு மீண்டும் திரும்புவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதைத்தொடர்ந்து அமெரிக்க வெளிவிவகாரச்செயலர் கொண்டலீசாரைஸ் சிரேஷ்ட அதிகாரிகளை நேற்று சந்தித்துப்பேசியதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட கொரியா மீண்டும் ஆறு தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கு இணங்கியமைக்கு வெள்ளை மாளிகை வரவேற்பதாகவும் அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்பெயின் ஜல்லிக்கட்டு போட்டி பிரான்ஸ் நாட்டவர் படுகாயம்

ஸ்பெயின் நாட்டில் காளை அடக்கும் ஜல்லிக் கட்டு போட்டி ஒன்றின் போது மாடொன்று முட்டியதால் இதில் கலந்து கொண்ட பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒருவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். பலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

பார்சிலோனாவில் அண்மையில் நடை பெற்ற ஜல்லிக் கட்டு போட்டியிலேயே இந்த விபத்து [illegible] போட்டியில் கலந்து கொண்டவரின் வாய் மற்றும் [illegible] உடற்பகுதிகளில் பலத்த காயம் ஏற்பட்டது.

பிரபல எழுத்தாளரான ஓ[illegible]ஹாமில்வேயினால் பகிரங்கப்படுத்தப்பட்ட இந்தப் போட்டி கடந்த வியாழன் ஆரம்பமானது. போட்டியின் போது பலர் காயமடைந்த முதலாவது சம்பவம் இதுவாகும்.

## எரிவாயு குழாய் வெடித்ததில் மெக்சிக்கோவில் ஒருவர் பலி; பலர் காயம்

மெக்சிக்கோவின் தென்பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற எரிவாயுக்குழாய் வெடிப்புக்காரணமாக ஒருவர் பலியானதுடன் 11 பேர்காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ் அனர்த்தம் இடம்பெற்ற இடத்திற்கு அருகிலிருந்த சுமார் 800 இற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். எரிவாயுக் குழாயில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளதாகவும் தொழி லாளர்கள், இராணுவத்துருப்புக்கள், தொண்டர்கள், பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் நிலைமை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# கிளி. மாவட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூர் வீதிகளின் புனரமைப்பு மந்தகதி!

## -நிதி வழங்கலில் இழுத்தடிப்பே காரணம்

(அலுவலக செய்தியாளர்)

**உள்ளூராட்சி திணைக்களத்தினால் கிளிநொச்சி மாவட்ட கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ளூர் வீதிப்புனரமைப்புப்பணிகள் மந்தகதியில் இடம்பெற்றுவருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**

மேற்படி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்; பிரதமரின் நிதியிலிருந்து "மகாநெக்மு" திட்டத்தின் மூலம் உள்ளூர் வீதிகளின் புனரமைப்புக்கென பத்து மில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டு உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள நான்கு பிரதேச செயலர் பிரிவுகளிலும் உள்ளூர் வீதிகளின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பெற்ற பொழுதிலும் இதுவரை 3.2 மில்லியன் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ள தெனவும் மிகுதியான 6.8 மில்லியன் ரூபா நிதியுதவி இதுவரை வழங்கப்படாமையின் காரணமாகவே உள்ளூர் வீதிகளின் புனரமைப்புப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட முடியாதநிலை தோன்றியுள்ளதெனவும், மிகுதியான 6.8 மில்லியன் ரூபா நிதியுதவி விடுவிக்கப்படும் பட்சத்திலேயே மேற்கொண்டு உள்ளூர் வீதிப்புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ள முடியுமெனத் தெரிவித்தனர்.

ஏற்கனவே கிளிநொச்சி திருநகர் வீதியானது டி.7 உருத்திரபுரம் வரையிலான ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை தார் ஊற்றி செப்பனிடப்படவுள்ளதென முன்பு தெரிவிக்கப்பட்டிருந்தும் தற்போது இரண்டு கிலோமீற்றர் தூரமான பாதைக்கு மட்டும் தார் ஊற்றி செப்பனிடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சோ)

# காணியைத் துப்புரவு செய்கையில் பெண்ணின் எலும்புக்கூடு மீட்பு

## -அளம்பில் பகுதியில் சம்பவம்

(முல்லை)

அளம்பில் தங்கபுரத்தில் மனித எலும்புக்கூடு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. காணி துப்புரவு செய்யும்போது கடந்த வியாழனன்று பொதுமக்களால் இது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இவ் எலும்புக்கூடு பெண் ஒருவருடையதாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகின்றது. இது தொடர்பாக விசாரணைகளை முல்லை பிரதேசகாவல்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# மின், தொலைபேசி கம்பங்களை சீராக நாட்ட வலியுறுத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் பகுதியில் மின், தொலைபேசி கம்பங்கள் சீரற்ற முறையில் நிறுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வீதியின் ஒரு பக்கத்தில் மட்டும் அமைக்கப்படாமல் இருபக்கங்களிலும் மாறிமாறி மின், தொலைபேசி கம்பங்கள் நாட்டப்பட்டுள்ளன.

இதேவேளை தொலைபேசி கம்பமொன்று கடந்த ஆறு மாதங்களாக முறிவடைந்த நிலையில், தொலைபேசி கேபிள்கள் தொங்கிய நிலையில் காணப்படுகின்றது.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இதுவிடயத்தில் கவனம் செலுத்த வேண்டப்படுகின்றனர். (15)

# கிராம அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்தல்

## -வவுனியா வடக்கில் நடவடிக்கை

போர்ச் சூழலினால் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்குப் பிரதேச மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலுள்ளனர். இவர்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் கிராம அபிவிருத்தி வேலைத் திட்டச் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

வவுனியா மாவட்ட புளியங்குளம் வடக்கில் பழைய தென்றல் ஓய்வகமும், கீரிசுட்டான் கற்குளம் பகுதியில் பொதுநோக்கு மண்டபமும், சின்னடம்பன் விஞ்ஞானகுளம் பகுதியில் சிவன் முன்பள்ளியும், நெகிழ்படந்தான் அன்னதேவன் மடு வீதியிலுள்ள குழவிசுட்டானில் பொதுநோக்கு மண்டபமும் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன. டென்மார்க் அகதிகள் பேரவை நிறுவன நிதியுதவியுடன் நெடுங்கேணி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினூடாக வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் இக்கிராம அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்நிகழ்வில் முதற்கட்டமாக மக்கள் பங்கேற்புடனான கிராம மதிப்பீடு கடந்த 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெற்றது. டென்மார்க் அகதிகள் பேரவையைச் சார்ந்த கிராமப்பிரதி நிதிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள், பிரதேசப் பிரதிநிதிகள், கிராமசேவையாளர்கள், பொது அமைப்புக்கள், பொதுமக்களெனப் பலரும் இதில் கலந்து கொண்டதுடன் வேலைத் திட்டங்கள் இனங்காணப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட செயற்திட்டம் பற்றியும் ஆராயப்பட்டது.

# ஜேர்மன் மக்களின் ஆதரவில் 27 பிள்ளைகளுக்கு உதவி

(முல்லை)

ஜேர்மன் மக்களின் நிதியுதவியுடன் முல்லைத்தீவில் சுனாமியினால் தாய், தந்தையரை இழந்த 27 பிள்ளைகளுக்கு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம் தலா பத்தாயிரம் ரூபா வங்கியில் வைப்பிலிடப்பட்ட புத்தகத்தினை நேற்று முன்தினம் வழங்கியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தில் வைத்து இப்புத்தகம் வழங்கப்பட்டது. கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தலைவர் மரியராசா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நிதியினைச் சேகரித்து வழங்கிய சத்தியமூர்த்தி, செல்வச்சந்திரன் ஆகியோர் மங்கல விளக்கை ஏற்ற, கருத்துரைகளை முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கச் சமாசத்தின் தலைவர் மற்றும் சத்தியமூர்த்தி, செல்வச்சந்திரன் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வின் இறுதியில் சத்தியமூர்த்தியினால் மதியபோசனமும் வழங்கப்பட்டது. மேற்குறித்த பிள்ளைகளும் அவர்களுடைய பாதுகாவலர்களும் கலந்துகொண்டனர். (20)

# முன்பள்ளி பெற்றோருக்கு கருத்தூட்டல் கூட்டம்

(கிளிநொச்சி)

முன்பள்ளி சிறார்களின் கல்வி மேம்படுத்தலை முன்னிலைப்படுத்தி முன்பள்ளி பெற்றோர்களிற்கான கருத்தூட்டல் கூட்டம் ஒன்று திருவையாறு-சாந்தபுரம் சாந்தன் முன்பள்ளியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை எட்டு மணியளவில் நடைபெற்றுள்ளது.

முன்பள்ளிகளின் மாவட்ட இணைப்பாளர் செல்வி யோகநிலா, முன்பள்ளி வலய இணைப்பாளர் திருமதி. சக்திவேல், பிரதேச இணைப்பாளர் திருமதி.ஜெயகாந்தராசா மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு முன்பள்ளி சிறார்களின் கல்வி மேம்பாட்டை முதன்மைப் படுத்துவதாக அமைந்ததுடன் வீட்டுத் தரிசிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றது.(15)

# நிகொட் திட்டத்தின் ஊடாக செம்மலையில் வருமான அதிகரிப்பு மேற்கொள்ள உதவி

(முள்ளியவளை)

முல்லை.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் நிகொட் நிறுவன நிதியுதவியுடன் வருமான அதிகரிப்புத் திட்டத்தின் கீழ் செம்மலைக்கிராம சமூக அபிவிருத்திச் சங்கத்தினால் அப்பகுதியிலுள்ள 28 பயனாளிகளுக்கு ஐந்து இலட்சம் ரூபா நிதி கடனுதவியாக வழங்கப்பட்டது.

மேற்படி நிகழ்வானது கடந்த வியாழனன்று பி.ப. 3.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் நிறுவன தொடர்பக ஒன்று கூடல் மண்டபத்தில் செம்மலை சமூக அபிவிருத்திச் சங்கத்தலைவர் மா. அபிமன்னகுமார் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வைத் தொடர்ந்து வரவேற்புரை, தலைமையுரை இடம்பெற்று கருத்துரைகளை நிகொட் திட்ட சமுதாய உத்தியோகத்தர் சுதர்சன், த.பு.கழகத்தின் நிகொட்திட்ட சமுதாய இணைப்பாளர் பரமானந்தம், அப்பகுதி கிராம அலுவலர் புஸ்பராசா ஆகியோர் நிகழ்த்தியதையடுத்து கடனுதவியின் நோக்கம், இதன் மூலம் எவ்வாறான வருமான அதிகரிப்பை ஈட்டமுடியும். இதனூடே இச்சமுதாயம் எவ்வாறான மாற்றத்தை வளர்ச்சியினை காண முடியும் போன்ற கருத்துக்களை உள்ளடக்கி சிறப்புக்கருத்துரையினை முல்லைத்தீவு மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் எம்.ஆர்.மூர்த்தி நிகழ்த்தியதையடுத்து விவசாயச் செய்கைக்காக 10 பயனாளிகளுக்கு தலா ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா வீதமும் கடற்றொழிலுக்காக 10 பயனாளிகளுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதமும், கால்நடை வளர்ப்புக்காக 4 பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபாவீதமும், சிறு வியாபாரத்திற்காக 4 பயனாளிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும் மொத்தம் ஐந்து இலட்சம் ரூபா நிதி கடனுதவியாக வழங்கப்பட்டதையடுத்து அப்பகுதி கிராம அபிவிருத்திக்குழுச் செயலாளர் இராமலிங்கத்தின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவானது. (ஆ)

# முல்லை. வர்த்தகர்களின் மேம்பாட்டிற்கு ஒன்றுகூடல்

(முல்லை)

முல்லைப்பிரதேச வர்த்தகர்களை மேம்படுத்தும் நோக்கில் முல்லைப் பிரதேச வர்த்தக சங்கத்தின் சிறப்புக்கலந்துரையாடல் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயதத்தில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணிக்கு வர்த்தக சங்கத்தலைவர் மனோ தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வர்த்தகர்களின் தற்போதைய நிலை தொடர்பாகவும் கியூடெக், ஹரிதாஸ் நிறுவனங்களினால் வர்த்தகர்களுக்கு சுழற்சி முறையில் வழங்கப்பட்ட கடன் திரும்ப ஒப்படைக்கப்பட்டது பற்றியும் அறிவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் கருத்துரைகளை முல்லை உதவிப்பங்குத்தந்தை திருமகன், பொருளாளர் மோகன் ஆகியோர் வழங்கினார்கள். நிகழ்வில் விசேடமாக முல்லைத்தீவு வர்த்தகர்களுக்கான யாப்பு தயாரிக்கப்பட்டு பொருளாளரினால் வாசித்தும் காட்டப்பட்டது. யாப்பின் மூலம் வர்த்தகர்களுக்கு பலநன்மைகள் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (20)

# பொதுச்சந்தையில் நிறுவைக்கு எலுமிச்சை!

(முள்ளியவளை)

முள்ளியவளை பொதுச்சந்தையில் உள்ள இறைச்சி விற்பனை நிலையத்தில் நிறுவை [illegible]க்குப் பதிலாக எலும்மிச்சம் [illegible] பயன் படுத்தப்பட்டு வருகின்[illegible] அவதானிக்க முடிகின்றது.

மேற்படி [illegible] இறைச்சி நிறுக்கும் [illegible] 50 [illegible] படிக்குப் [illegible] பயன்படுத்த[illegible] [illegible]த்தக்கது. (ஆ)

# சுழற்சிமுறைக் கடன் வழங்கல்

டெனிஸ் அகதிகள் பேரவை நிதியுதவியுடன் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் ஏற்றுமதி இறக்குமதி மீன் கொள்வனவுகளைச் செய்து வந்தவர்களுக்கு அவர்களது தொழிலை மேம்படுத்தும் நோக்குடன் 23 பயனாளிகளுக்கு முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தினால் சுழற்சி முறையிலான கடன் வழங்கப்பட்டுள்ளது. இக்கடன் கடந்த சனிக்கிழமை முல்லை சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டது. கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசத் தலைவர் தலைமையில் இடம பெற்ற நிகழ்வில் கருத்துக்களை டெனிஸ் அகதிகள் பேரவைபிரதிநிதி வழங்கினார். சமாச வங்கியினூடாக இக்கடன் வழங்கப்பட்டுள்ளது. (20)

# கணித, விஞ்ஞான பாடங்களிற்கான வினாடி வினாப்போட்டி

கோட்டமட்ட கணித, விஞ்ஞான வினாவிடைப்போட்டி கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு தனித் தனியாக எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணி முதல் நடைபெறவுள்ளது.

தரம் 6 இல் இருந்து 11 வரையான மாணவர்களுள் பாடசாலை மட்டப்போட்டிகளில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்களுக்கு கோட்ட மட்டத்தில் குறுகிய வினாக்கள் கொண்ட எழுத்துப்பரீட்சை நடைபெறும்.

வலய மட்டப்போட்டிகளில் ஒவ்வோர் தரத்திலும் முதலாமிடத்திற்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் மாகாண மட்டப்போட்டிகளில் பங்கு பற்றுவதற்குத் தகுதியுடையவராவர். வலயமட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களிலும் தெரிவாகும். மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பூநகரிக் கோட்டபாடசாலை மாணவர்களிற்குப் பூநகரி ம.வி யிலும், பளைக்கோட்ட பாடசாலை மாணவர்களிற்குபளை மத்திய கல்லூரியிலும் கண்டாவளைக் கோட்டப் பாடசாலை மாணவர்களிற்குத் தர்மபுரம் ம.வி யிலும், கரைச்சிக்கோட்ட கிழக்குப் பிரதேச மாணவர்களுக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும், கரைச்சி கோட்ட மேற்குப் பாடசாலை மாணவர்களுக்கு கிளிநொச்சி ம.வி இலும் பரீட்சைகள் நடைபெறும். (34)

# தமிழர் தாயகத்தின் ஒட்டுமொத்த நலன்களைக் கருத்திற்கொண்டே அரச, அரசசார்பற்ற உதவி நலத்திட்டங்கள் அமையவேண்டும்

### -தமிழீழ சுகாதார சேவைகள் அறிவுறுத்து

தமிழர் தாயகத்திற்கான ஒட்டுமொத்த சுகாதாரத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும், அதற்கமைவாக அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் சுகாதார நலத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் ச.விக்கிரமன் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாகரிக உலகின் அபிவிருத்திக்கேற்ப சுகாதாரப் பிரச்சனைகளும், அதிகரித்துக்கொண்டு செல்வதுடன், அவற்றுக்கான பரிகார பரிமாணங்களும் விரிவடைந்து செல்கின்றன. இதனால் எவ்வளவு வளங்களைச் செலவு செய்தாலும் மேற்படி சுகாதாரப்பிரச்சினைகள் தீர்க்கப்படாதவையாக. புதிய வடிவங்களில் தோற்றம்பெற்றவண்ணமே உள்ளன. இந்நிலையில் எமது செயற்பாடுகள் அவ்வப்பிரதேச சமுக, கலாச்சார, புவியியல், அரசியல் பின்னணிகளுக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டு செயற்படுத்தப்படாவிடில் நாம் செலவிடுகின்ற வளங்கள் யாவும் விழலுக்கிறைத்த நீராகிப்போவதுடன், பொன்னான காலமும் விரயமாகிவிடுகிறது. இதனைக் கடந்தகால நிகழ்வுகள் சான்றுபகன்று உறுதிப்படுத்துகின்றன.

இப்பிரச்சினைகள் தொடர்பாக ஏற்கனவே இனங்காணப்பட்டு பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டப்பட்டு ஒருங்கிணைந்த கண்காணிப்பின் கீழான வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும் எனும் தீர்மானத்தின் கீழ் 1998ஆம் ஆண்டு முதல் 2002ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் திட்டங்கள் நடைமுறைப்படுத்தபட்டு வந்தபோதும் 2002 இன் பின்னர் ஏற்பட்ட போர்நிறுத்தகாலத்திலும், சுனாமி அனர்த்தத்தின் பின்பும் எழுந்தமான சுகாதார வேலைத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழர் தாயகப் பகுதிக்கான ஒட்டுமொத்த சுகாதாரத்திட்டம் ஒன்றினைத் தமிழீழ சுகாதார சேவையினராகிய நாம் வரைந்துள்ளோம். எனவே அனைத்து நிறுவனங்களும் அத்திட்டங்களுள் அடங்கும்வகையில் தமது வேலைத் திட்டங்களை இனங்கண்டு எமது அனுமதி பெற்றுச் செயற்படுத்துவது எமது பிரதேசத்தின் உண்மையான சுகாதார மேம்பாட்டிற்கு இட்டுச் செல்லும் என நம்புகின்றோம். இதனைக் கருத்திற்கொண்டு இனிவரும் காலங்களில் சுகாதாரம் தொடர்பான வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள உத்தேசிக்கும் அரச, அரசார்பற்ற நிறுவனங்கள் எவையாயினும் தங்கள் உத்தேசத் திட்டத்தினை எமக்கு முன்னளித்து எமது முதன்மைத்திட்டத்திற்கு அமையக் கூடியவாறு தங்கள் திட்டங்களை வடிவமைத்துச் செயற்படுவதன் மூலம் சீரான, உண்மையான சுகாதார மேம்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

# தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ முடியாது என்பதை இனவாத சக்திகள் வெளிக்காட்டி நிற்கின்றன!

### -யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(வடமராட்சி)

"இலங்கையில் தமிழ்மக்கள் நீதியானதும், சுதந்திரமான வாழ்வொன்றை வாழ முடியாதென்பதை தென்னிலங்கை இனவாத சக்திகள் தொடர்ந்தும் வெளிக்காட்டி நிற்கின்றன. அதன் ஓர் புதிய பரிமாணமாகவே புத்தர்சிலைகளை தமிழர் தாயகப் பகுதிகளில் நிறுவி அவர்கள் செய்துவரும் அடாவடிகளாகும்". என யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர். சி.இளம்பரிதி தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்; தமிழர்கள் சுயாட்சியுடன் தம்மைத் தாமே ஆளுகின்றதோர் நிலை என்று ஏற்படுகின்றதோ அன்றே எமக்கு உரிய தீர்வு கிட்டும். சுய கௌரவத்துடன் தனி மனித சுதந்திரத்தைப் பேணும் வாழ்வு முறையொன்றை வாழ தமிழ்மக்கள் முற்பட்டு நிற்கின்ற போதும், அதனை அனுமதிக்க சிங்கள பௌத்த பேரினவாதிகள் தயாராகவேயில்லை. இந்த உண்மையை எம்மவர்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். மதத்தின் அடையாளமாக இருந்த புத்தர் சிலைகள் இன்று ஆக்கிரமிப்பின் சின்னமாகிவிட்டது. இவ்வாறானதோர் ஆக்கிரமிப்பு அதிகரித்துச் செல்கின்ற நிலையில் நாம் வெறுமனே வேடிக்கையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (27)

### ~உதவிகள் கிடைக்காமையால்~

# கட்டுமரம் மூலமான மீன்பிடியில் அதிக ஆர்வம்

(வடமராட்சி)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் மீண்டும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான உதவிகளேதும் பெரிதும் கிட்டியிருக்காத நிலையில் கட்டுமரம் மூலமான மீன்பிடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குறிப்பாக மீன்பிடிப்படகுகள் மற்றும் வள்ளங்களைக் கொள்வனவு செய்வதற்காக பெருமளவு நிதி தேவைப்படுவதாலும் அத்துடன் சந்தையில் நிலவிவரும் நெருக்கடிகளாலும் கட்டுமரங்கள் மூலமான மீன்பிடியில் மீனவர்களிடையே ஆர்வம் அதிகரித்துள்ளது.

யாழ். குடாநாட்டில் இரு தனியார் தொழில் அதிபர்களால் கட்டுமரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றது. மாதம் ஒன்றிற்கு அறுபதிற்கும் அதிகமான கட்டுமரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றபோதிலும் அவ்வுற்பத்தி தேவைகளுக்குப் போதியதாக இல்லையெனவும் கூறப்படுகின்றது.

இதனிடையே இக்கட்டுமரங்களின் மூலம் கடலில் மிகவும் குறுகிய தூரத்திற்கு மட்டுமே சென்று மீன்பிடியில் ஈடுபடக்கூடியதாக இருப்பதாகவும், எனினும் கடற்படையினரின் ரோந்துப்படகுகளால் வடகடற்பகுதிகளில் கட்டுமரங்கள் மோதப்பட்டு வருவதாகவும் குற்றம் சாட்டப்படுகின்றது.

தொடர்ச்சியாக இதனால் மீனவர்கள் காயங்களையும், உயிரிழப்புக்களையும் சந்தித்து வருவதாகவும், வடமராட்சி வடக்கு மீனவசங்கங்களின் சமாசச் செயலாளர் சூரியகுமாரன் குற்றம் சாட்டியுள்ளார். (27)

# பத்து இலட்சம் மக்கள் வெள்ளத்துடன் ஜுலை- 12இல் கொழும்பிற்குள் நுழைவோம்

### - ஐ. தே. க. பா. உறுப்பினர் ஹேம குமாரநாணயக்கார

(கொழும்பு)

நாம் எதிர்வரும் 12 ஆம் திகதி பத்து இலட்சம் மக்களுடன் கொழும்பிற்கு வருவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேம குமாரநாணயக்கார தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டிருந்த அவர் மேலும் தெரிவிக்கையில்; மக்களின் தொகை பெருமளவில் அதிகரித்திருக்கிறது. வீதி நிறைய மக்கள் வருகின்றனர்.12 ஆம் திகதி பத்து இலட்சம் மக்களுடன் கொழும்பிற்கு வருவோம். நாம் இரண்டு வருடம் ஆட்சி செய்த போது முறையாக பொருளாதாரத்தை விருத்தி செய்வதனைத் தாங்கிக்கொள்ள முடியாத சனாதிபதியும், ஜே.வி.பி.யும் இணைந்து சூழ்ச்சி செய்து எமது ஆட்சியைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குப் போனார்கள். அன்று எமக்கு பெரும்பான்மை இருந்தது. அப்படியானால் அன்று செய்தது சனநாயக விரோத செயல். இன்று பாராளுமன்றில் 142 ஆசனங்கள் எதிர்கட்சிக்கே. 82 ஆசனங்கள் மட்டுமே ஆளும் கட்சிக்கு. நாம் எமது சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்து விட்டோம் அவரே ரணில் விக்கிரமசிங்க. ஆளும் கட்சிக்குத் தான் இன்னும் வேட்பாளரைத் தெரிவு செய்ய முடியாதுள்ளது எனவும் தெரிவித்தார்.

# கடத்தப்பட்ட கப்பல் கப்டன் உடல் நலத்துடன் உள்ளார்

(கொழும்பு)

சோமாலியாவுக்கு ஐ.நா.உதவிப்பொருட்கள் எடுத்துச் செல்கையில் கடத்தப்பட்ட கப்பல் கப்டன் உடல்நலத்துடன் இருப்பதாக யாழ். இலுள்ள அவரது குடும்பத்திற்கு அறிவித்துள்ளதாக சிறிலங்கா வெளிநாட்டு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சோமாலியாவில் பிடித்துவைக்கப்பட்டிருக்கும் இவருடன் இவர்பணிபுரியும் சென்னையிலிருக்கும் மதாக்கோ கப்பல் நிறுவனம் தொடர்பு கொண்டதாகவும் அப்போழுது தான் உடல் நலத்துடன் இருப்பதாக தெரிவித்தாகவும் கப்பல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்விபரத்தை யாழ்.இலுள்ள தமது குடும்பத்துக்கு அறிவிக்குமாறு கப்பல் கப்டனான எஸ்.மகாலிங்கம் அறிவித்துள்ளதாகவும் வெளிநாட்டு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு கொழும்பில் நிரந்தர வீடுகள்

(கொழும்பு)

சுனாமி கடல் சீற்றம் காரணமாகப் பாதிக்கப்பட்ட கொழும்பு மாவட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக்கொடுக்க நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் இரத்மலானை மற்றும் தெஹிவளைப் பிரதேசங்களில் 500 வீடுகள் அமைக்கப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் உத்தியோக பூர்வமான ஆரம்ப நிகழ்வு அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. (32)

# தண்டனை வழங்க ஐ.தே. க. தயார்!

தற்போதைய அரசு சுனாமி நிவாரணம் சம்பந்தமாக எவ்வாறு நிதியைப் பயன்படுத்தியுள்ளது என்பது பற்றி எமது அரசாங்கம் பதவிக்கு வந்த பின் பாரபட்சம் காட்டாமல் நிதி மோசடி செய்தவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படும் என ஐக்கிய தேசியக்கட்சி பிரதி செயலாளர் கடந்த 5ஆம் திகதி அரசுக்கு எதிராக தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் எதிர்ப்புக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

# அரச பேச்சாளராக நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

சிறிலங்கா அரசாங்கத்தின் புதிய பேச்சாளராக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்கமைய அமைச்சர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உத்தியோக பூர்வமாக தனது கடமையை ஆரம்பித்துள்ளார்.

### -தேசிய பாடசாலைகளில்-

# கல்வி அமைச்சின் ஊடாக ஆண்டு-1 மாணவர் தெரிவு

இலங்கையில் உள்ள 238 தேசிய பாடசாலைகளுக்கும் முதலாம் ஆண்டிற்கான மாணவர் தெரிவு விடயம் முதல் தடவையாக கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

முதலாம் ஆண்டில் மாணவர்களை அனுமதிப்பது தொடர்பில் தேசிய பாடசாலை அதிபர்கள் பலமுறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டமை தெரியவந்ததை அடுத்தே கல்வி அமைச்சு இந்த நடவடிக்கையினை எடுத்துள்ளது.

இதன் மூலம் முதலாம் ஆண்டிற்கான மாணவர் தெரிவுகள் கல்வி அமைச்சின் ஊடாகவே மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இரண்டு மில்லியன் மிதிவெடிகள் வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் புதைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் சுமார் இரண்டு மில்லியன்கள் வரையிலான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டு இணைப்பாளர் எஸ்.எஸ்.எம்.ஹக்கிம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மிதிவெடிகளின் ஆபத்துக் குறித்து பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கல்விவாரத்தை முன்னிட்டு கடந்த வாரம் புத்தளம் கல்விவலயத்துக்குட்பட்ட 18 தமிழ் மொழிமூலமான மாணவர்களுக்கான செயலமர்வை ஆரம்பித்து வைத்து அவர் உரையாற்றினார்.

புத்தளம் மஜ்ஸிஸ் வீதியில் அமைந்துள்ள சமூக நம்பிக்கை நிதியத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே ஹக்கிம் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கில் ஒவ்வொரு ஆண்டும் மூன்றாவது காலாண்டிலேயே அதிகளவான மிதிவெடி விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவித்த அவர், மழைகாலத்தில் விவசாயிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அதிகளவான மிதிவெடிச் சம்பவங்கள் ஏற்படு வதாகச் சுட்டிக்காட்டினார். (32)

# எதிர்பார்ப்புகளுக்கு மாறாக அதிகாரம் கை மாறும்?

**1977ஆம்** ஆண்டு தேர்தல் திகதி அறிவிக்கும் முன்பு அப்போது ஆட்சியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களான பீலிக்ஸ்டயஸ் பண்டார நாயக்க, ரி.பி.இலங்கரத்ன, ஹெக்டர் கொப்பேகடுவ ஆகியோர் அப்போது தேர்தலை நடத்த வேண்டாம் என கூக்குரல் இட்டனர். இதற்குக்காரணம் 1976 ஆம் ஆண்டு நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் சிறிமாவோ அதன் தலைவியாக தெரிவு செய்யப்பட்டதும் அப்பதவி 1979 வரை நீடிக்க வேண்டும் என்ற நோக்கமுமாகும்.

இதற்கிடையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியன இணைந்த கூட்டு முன்னணி அரசிலிருந்து விலகியிருந்த லங்கா சமசமாஜக் கட்சி உறுப்பினரான என்.எம். பெரேரா ஜே.ஆரை வெற்றி காண நடந்த மந்திராலோசனையில் கலந்துகொள்ள மறுத்தார். அத்துடன் சிறிமாவோ தேர்தலை ஒத்தி வைத்துவிட்டு சட்ட விரோதமான அரசாங்கத்தை நடத்துவாரெனில் அது தனதும், தனது ஆதரவாளர்களினதும் பிணத்தைக் கடந்தே செல்ல வேண்டியிருக்கும் என்று களுத்துறையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மிகுந்த கரகோஷத்துக்கு மத்தியில் தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.ஆரை வீழ்த்த வேண்டும் என்று சபதமிட்டவேளை இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி என்பன ஜே. ஆருடன் கைகோர்த்து நின்றன. தேர்தலை ஒத்திப்போடுவதை எதிர்த்தன தேர்தலை



தயானந்த திஸாநாயக்க

ஒத்திவைக்கும் சட்டவிரோத அரசை கவிழ்க்க ஜே.ஆர் உயிரையும் கொடுக்கத் தயார் எனக் கூறியபோது கட்சி ஆதரவாளர்களும் உயிரைக்கொடுப்பதாகத் தெரிவித்தனர். 1977ஆம் ஆண்டு மே 22ஆம் திகதிக்குப்பின் ஒரு நாளேனும் அரசு பதவியிலிருக்குமானால் புரட்சிசெய்து அரசைக் கவிழ்க்கப் போவதாகவும்அன்று ஜே.ஆர்.சபதம் எடுத்தார்.

அதேபோன்ற ஒரு குரலே இன்றும் ஒலிக்கின்றது. "இந்த வருடம் சனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறாது" அநுரபண்டார நாயக்க, மங்களசமரவீர ஆகியோரின் வாயிலிருந்து வெளிப்படுவது இந்த வாக்கியமே. இவ்வாறு அவர்கள் விவாதிக்கக்காரணம் சந்திரிகா சட்டப்படி 1999ஆம் ஆண்டு டிசம்பர் 22ஆம் திகதி எடுத்த சத்தியப் பிரமாணம் அல்ல. அதற்குப் பின்னர் மீண்டும் செய்துகொண்ட இரகசிய சத்தியப் பிரமாணம் என்பதாகும். சட்டப்படியான பதவிப் பிரமாணத்தின்படி அவரது பதவிக்காலம் 2005 டிசம்பரில் முடிவடைகின்றது. இரகசியப் பிரமாணத்தின்படி அது 2006 டிசம்பர் வரை நீடிக்கின்றது.

எவ்வாறேனும் சனாதிபதித்தேர்தல் நடைபெற வேண்டியது 2005 ஆம் ஆண்டிலா? 2006 ஆம் ஆண்டிலா? என்பதை சனாதிபதி சந்திரிகாவோ அவரது அரசோ முடிவுகட்ட முடியாது. அதற்கு முடிவெடுப்பது தேர்தல் ஆணையாளர் மட்டுமே.

1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பின்படி சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டியது எப்பொழுது என்பதை சனாதிபதி ஒருவர் தனது முதலாவது பதவிக் காலத்திலேயே தீர்மானிக்க முடியும். அதன்படி அவரது பதவிக்காலம் முடிவடைய ஒருவருடம் முன்பே தேர்தலை நடத்தலாம். இரண்டாவது பதவிக்காலத்தில் அவர் தேர்தல் நடத்துவது பற்றி தீர்மானிக்க முடியாது. அந்த முடிவை தேர்தல் ஆணை யாளரே எடுப்பார். சனாதிபதி பதவிப் பிரமா ணம் எடுத்த தினத்திலிருந்து கணக்கிட்டு ஆறு வருடங்கள் பூர்த்தியாகும்போது அவர் தேர்தலை அறிவிப்பார். சந்திரிகா பதவியேற் றதை தேர்தல் ஆணையாளர் உறுதிப்படுத்தக் கூடிய ஆவணம் அரச வர்த்தமானி ஒன்று மட்டுமே.



ஜே.ஆர். ஜெயவர்த்தன



சிறிமாவோ

ஒரு பிரதமரோ, அமைச்சரோ பதவிப் பிரமாணம் எடுத்தாலும் அது சட்டரீதியாவது வர்த்தமானி அறிவித்தலின் பின்னரே. அவ்வாறு இல்லாதுவிடில் யாரும் தான் பிரதமராகவோ அமைச்சராகவோ இருந்ததாக வாதாடலாம். நீதிமன்றத்தில் நிரூபிக்க உதவும் சாட்சியாகவும் வர்த்தமானி பயன்படும். அது சனாதிபதிக்கும் பொருந்தும். அவ்வாறாயின் இரண்டாவதுமுறை சனாதிபதி பதவிப் பிரமாணம் எடுத்திருப்பின் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும். அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு வெளியிடாமல் வெறும் பத்திரிகைவாயிலாகவே வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறு அறிவித்தலைக் கொண்ட வர்த்தமானி வெளியிடப்படவுமில்லை. தேர்தல் ஆணையாளரிடம் போய்ச் சேரவுமில்லை. அவர் 2000 ஆம் ஆண்டு இரகசியமாக பதவிப் பிரமாணம் செய்துள்ளார் என்பது உடனடியாகவே பத்திரிகைகளில் வெளிவராமல் மூன்று வருடங்களின் பின் அதாவது 2003 ஆம் ஆண்டிலேயே பத்திரிகையில் தகவல் வெளியானது. அதனை தேர்தல் ஆணையாளர் சட்டப்படியான அறிவித்தலாகக் கொள்வது எவ்வாறு? அத்துடன் பதவிப் பிரமாணம் செய்த தினம் பற்றி மங்கள சமரவீர ஒரு மாதம் ஒரு திகதியையும், சரத்அமுனுகம வேறொரு மாதம் ஒரு திகதியையும் கதிர்காமர் தனக்கு சற்றே ஞாபகமிருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

உப்புள் ஜோசப் பர்னாந்து
(லங்காதீப)
**தமிழில் வடிவேல்**

எனினும் 2000 ஆம் ஆண்டில் இரண்டாம்முறை தான் பதவியேற்றதை உயர்நீதிமன்று அனுமதித்ததாக அமைச்சரவையில் சந்திரிகா தெரிவித்தார். அவ்வாறு அவர் சத்தியப் பிரமாணம் செய்திருந்தால் அதுபற்றி அரசியலமைப்பு ஆவணங்களில் பதிவு செய்யப்படாதது ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இவ்வகையான நிலைமையை ஆராய்ந்த பின்னரே தேர்தல் ஒன்றுபற்றி ஆணையாளர் திகதி குறிப்பிடுவார். 1999 ஆம் ஆண்டில் சந்திரிகா சனாதிபதியாக பதவியேற்றது தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் வர்த்தமானி அறிவித்தல், புகைப்படம், வீடியோ நாடாக்கள் மற்றும் முப்படைத் தளபதிகள், அமைச்சர்கள் ஆகிய சான்றுகள் கைவசமிருக்கின்றன. அதற்கும் மேலாக பதவியேற்ற ஒரு வருடத்தின் பின்னர் அதாவது 2000 ஆம் ஆண்டு அது உயர்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு அமைச்சரவையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றும் இருக்கின்றது. ஆனால் இரண்டாம் முறை சத்தியப் பிரமாணம் எடுத்ததற்கு சான்றாக 2003 ஆம் ஆண்டு வெளியான தேசிய பத்திரிகை மட்டுமே உள்ளது.

எனவே நாட்டின் தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்க இவற்றுள் எதனை அடிப்படையாகக்கொண்டு தேர்தல் ஆணையாளர் அனுமதிப்பார் என்பதும் தற்போது எழுந்துள்ள வினாவாகும். இதுபற்றி அறிய இந்நாட்டு பிரஜைகள் மட்டுமன்றி உலகமும் ஆவலுடன் காத்திருக்கின்றது. காரணம் ஆணையாளர் தனிநபர் ஒருவருக்காகவா? நாட்டுமக்களுக்காகவா? முடிவெடுப்பார் என்பதாகும். அவர் தற்போது எடுக்கும் முடிவே இந்நாட்டில் எதிர்கால சனாதிபதிகளுக்கு முன்மாதிரியாக அமையும். வெறும் பத்திரிகை அறிவித்தலுக்கு ஏற்ப சந்திரிகா இரண்டாம்முறை பதவியேற்றதை சட்ட ரீதியானதாகக் கருத்தில்கொண்டு செயற்படுவாரெனில் எதிர்காலத்தில் இந்நாட்டு சனாதிபதிகள் தனக்கு ஆதரவான பத்திராதிபர் மூலம் தான் இரகசியமாக பதவிப் பிரமாணம் செய்துகொண்டதாக நாட்டுக்கு வெளிப்படுத்தி தனது பதவிக்காலத்தை தமக்கு வேண்டியவாறு அமைத்துக் கொள்ளலாம்.

ஆனால், சனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஆணையா ளரின் முடிவு எதிர்காலத்தில் அரசியலமைப் பிலுள்ள சிறுஓட்டை வழியாக தனது பதவிக் காலத்தை நீடித்து பாதுகாத்துக்கொள்ள பிறக்கும் வழியை மூடிவிடும் முடிவாக இருக்க வேண்டும்.

அன்று ஜே. ஆர். தனது அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்ள அரசியலமைப்பில் அவ்வப்போது மாற்றங்களைக் கொண்டு வந்தார். அதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியே பாதிப்பிற்குள்ளானது. அதனையே 1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் பின்பற்றுகின்றது. இன்று சந்திரிகா 2006 ஆம் ஆண்டுவரை பதவியிலிருக்கும் தந்திரத்தை ஆராய்கிறார். அவரும் ஜே. ஆர். கையாண்ட முறையையே பின்பற்றுகிறார். சிலவேளை 2006 ஆம் ஆண்டிலேயே சனாதிபதித்தேர்தல் நடைபெற்று ஐ. தே. க. வேட்பாளர் வெற்றிபெற்றால் நடப்பதும் இதுவே.

சிறிலங்காவில் அரசியல் இவ்வாறே உள்ளது.. 1970 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பதவிக்காலம் 1975 இல் முடிவடைவதாக இருந்தது. எனி னும் சிறிமாவோ 1972 ஆம் ஆண்டின் அரசி யலமைப்பின்படி மேலும் இரு வருடங்கள் பதவிக்காலத்தை நீடித்து 1977ஆம் ஆண்டு ஏப்பிரல் வரை பதவியில்



சந்திரிகா

இருந்து இரண்டு வருடம் ஆட்சியை நீடிக்கக்காரணம் அக்கட்சி மக்களிடம் இழந்த செல்வாக்கை புதுப்பித்துக்கொள்வதற்காகும். எனினும் அது எதிப்பார்த்ததற்கு மாறாக ஆட்சி அதிகாரம் ஜே.ஆரின் ஐ.தே.கட்சியிடம் சென்றது. அது மட்டுமன்றி எதிர்க்கட்சி ஸ்தானத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி இழந்தது. ஆனால் ஜே.ஆரும் தான் பெற்ற செல்வாக்கின்மூலம் சர்வசன வாக்கெடுப்பை நடத்தி மேலும் ஆறு ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்தார். அதன் பிறகு 1994ஆம் ஆண்டு ஐ.தே.கட்சி பெற்ற வீழ்ச்சி மக்களுக்கும், அரசியல் வாதிகளுக்கும் நினைவிருக்கலாம்.





# கடந்த வாரத்தில்

## 30.06.2005--06.07.2005

### 30

சீன சனாதிபதி ஹீ ஜிந்தாவோ உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு ரஷ்யா சென்றார்.

சிங்கப்பூர் பிரதமர் லீசியன்லூங் இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார்.

### 01


ஈராக்கிய ஷியா ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி அல்-சிஸ்தானியின் உதவியாளர் கமல்எடின் அல்குரைபி தொழுகைக்காக மசூதிக்கு காரில் சென்று கொண்டிருந்தவேளை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.இதற்கொதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்



துருக்கியில் தற்கொலைக் குண்டுதாரியொருவர் அந்நாட்டுப் பொலிசாரால் சுட்டுக்கொலை. குறிப்பிட்ட தற்கொலைதாரி தன்னை வெடிக்கவைக்கும் முன்பு பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

### 02


ஈராக் தலைநகர் பாக்தாத்தில் பொலிசுக்கு ஆட்களைச் சேர்க்கும் மையத்தில் இடம்பெற்ற மனித வெடிகுண்டுத் தாக்குதலில் 20 பேர் பலி; 21 பேர் காயம்.



மத்திய அமெரிக்க நாடுகளான நிக்கரகுவா மற்றும் கோஸ்பிரிகா நகரில் பூமியதிர்ச்சி ஏற்பட்டது, இது ரிச்டர் அளவுகோலில் 6.7 புள்ளியாகப் பதிவானது.

இந்தியாவில் விமானப்படைத் தளத்தை தகர்க்க முயற்சி செய்ததாக நான்கு பாகிஸ்தான் தீவிரவாதிகள் டில்லியில் கைது.

மதுரையில் சேதுசமுத்திரத் திட்டத்தை இந்திய பிரதமர் மன்மோகன்சிங் ஆரம்பித்தார்.



சேதுசமுத்திரத்திட்ட ஆரம்பவிழாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்ட 588 பேர் கைது

சீன அரசு மக்களிடமிருந்து நிலங்களை அபகரித்துக் கொள்ளும் நடவடிக்கைக்கு எதிராக குவாண்டொங் மாகாணத்தில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழகம் சிவகாசி அருகே பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் ஐந்து பெண்கள் உட்பட 10 பேர் பலியானதுடன், 22 பேர் காயமடைந்தனர்.



### 03



அல்குவைதா அமைப்பின் மூத்த தீவிரவாதியான யூனுஸ் முகமது இப்ராகிம் சவுதித் தலைநகர் ரியாத்தில் பொலிசாருக்கும் யூனுஸிற்குமிடையில் நடைபெற்ற சண்டையில் சவுதிப் பொலிசாரால் சுட்டுக்கொலை



ஈராக்கில் எகிப்து நாட்டு தூதரான இகாப் அல் ஷரிப் அவரது வீட்டில் வைத்து தீவிரவாதி களினால் கடத்தப்பட்டார்.

மொரீசியஸ்தீவில் பாராளுமன்றத் தேர்தல் இடம்பெற்றது.

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு வடக்கேயுள்ள குவேசன் நகர பல்கலைக்கழகத்தில் அந்நாட்டு சனாதிபதி குளோறியா அரோயாவைப் பதவி விலகுமாறு கோரி ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

ஈரானின் தென்கிழக்குப் பகுதியில் பொலிசாருக்கும் கொள்ளையர்களுக்குமிடையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஏழு பொலிசார் பலி; ஒன்பது பேர் காயம்.



சிரியாவின் எல்லையைக் கடந்து லெபனானுக்குள் நுழைய முற்பட்ட 34 தீவிரவாதிகள் சிரியப்படையால் கைது

### 04

அமெரிக்க இராணுவத்தினரின் முகாமில் பணியாற்றும் வர்ணம் பூசுபவரான ஓமர் ஓத்ம பாக்தாத்தில் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிலையமான நாசா வால்வெள்ளியுடன் மோதவிட்டு பரிசோதித்துப்பார்ப்பதற்காக அனுப்பிய விண்கலம் டெம்பெல்-1 எனப்படும் வால்வெள்ளியுடன் திட்டமிட்டவாறு மோதியது.

சிரியாவில் படையினருக்கும் தீவிரவாதிகளுக்குமிடையில் நடந்த மோதலில் இருவர் பலி.


நேபாள அரசால் கைது செய்யப்பட்டிருந்த மூத்த அரசியல்வாதியான நர்ஹாரி ஆசார்யா மனித உரிமைகள் நடவடிக்கை ஆர்வலர் மற்றும் மாணவர் தலைவர் ஆகியோர் விடுதலை செய்யப்பட்டனர்.

### 05

அயோத்தி ராம ஜென்ம பூமி கோயில் வளாகத்தில் தீவிரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தியதுடன், கோயில் வளாகத்தினையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இதன்போது பொலிசாருக்கும், தீவிரவாதிகளுக்குமிடையில் இடம்பெற்ற சண்டையில் ஆறு தீவிரவாதிகள் பலி.



சுமாத்திரா தீவுப்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் கட்டடங்கள் சில இடிந்துள்ளன. மக்கள் அச்சம் காரணமாக வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். இந் நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.8 புள்ளியாகப் பதிவானது.



குஜராத் மாநிலத்தில் தொடர் மழை காரணமாக அகமதாபாத் புறநகர் ஆனந்த் , வதோதரா, அம்ரேலிபாரூச், நாடியாட் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஐந்தாயிரம் கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்வு, 150 இற்கு மேற்பட்டோர் இறந்தனர்.



அமெரிக்காவில் சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது.

### 06

எட்டு தொழில் வளநாடுகளின் ஜி-8 உச்சி மாநாடு ஸ்கொட்லாந்திலுள்ள கிளினி எக்ஸ் எனுமிடத்தில் ஆரம்பம்.

அயோத்தியில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைக் கண்டித்து பாரதிய ஜனதாவும், சங்பரிவார் அமைப்பும் நாடு தழுவிய போராட்டத்தை நடத்தியது.



# உருத்திரபுரம் மத்திய மருந்தகத்தின் தொண்டர்களின் அவலநிலை!

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் மத்திய மருந்தக மகப்பேற்று மருத்துவமனையில் பணிபுரிந்துவரும் தொண்டர்களுக்கு பல மாதங்களாக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படாமையின் காரணமாக மேற்படி வைத்திய சாலையில் பணிபுரியும் தொண்டர்கள் கவலையடைந்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலையில் பணிபுரியும் நான்கு தொண்டர்களில் ஒருவருக்கான கொடுப்பனவினை தமிழீழ சுகாதார சேவையினர் வழங்கி வருவதாகவும் மற்றும் மூவருக்கும் உதவிகள் வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலம் 1500 ரூபா பெறுமதியுடைய உலர் உணவு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்ததெனவும், கடந்த நான்கு மாதங்களுக்கு மேலாக மூன்று தொண்டர்களுக்கும் மேற்படி கொடுப்பனவுகள் உதவி வழங்கும் நிறுவனத்தினால் வழங்கப்படாமையின் காரணமாக வைத்தியசாலையில் பணிபுரியும் மூன்று தொண்டர்களும் பெரிதும் கவலையடைந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் பணிபுரிந்த ஊழியர்கள் மூவர் பதவி உயர்வுபெற்று வேறு வைத்தியசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள பொழுதிலும் அவ்வெற்றிடங்களுக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படாத நிலையிலும் அவர்களுடைய பணிகளையும் மேற்படி தொண்டர்கள் மூலமாகவே நிறைவேற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(சோ)

# வேணாவில் கிராம வீதிகளை புனரமைக்கும்படி கோரிக்கை

(நமது நிருபர்)

புதுக்குடியிருப்பு நகரில் இருந்து வேணாவில் கிராமத்திற்குச் செல்லும் சகல சிறு வீதிகள் மக்கள் பயணம் செய்ய முடியாத அளவிற்கு மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

புதுக்குடியிருப்பில் பல கிராம வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றபோதும் வேணாவில் கிராமத்திற்குச் செல்லும் வீதிகள் திருத்தப்படவில்லை.

பாரிய கு ன்றும் குழியுமாக இவ்வீதிகள் காணப்படுவதுடன் வாகனங்கள் எதுவும் செல்ல முடியாது காணப்படுகின்றது.

இதனால், இக்கிராம மக்களும் இக்கிராமத்திற்குச் செல்லும் ஏனைய பகுதிமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

ஒரு பாடசாலையையும் பெருமளவான மக்களையும் கொண்டுள்ள இக்கிராம வீதியைப் புனரமைத்துத் தர சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# சிவராம் கொலை விசாரணை வழக்கில் புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாம்

## - கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணிப்பாளர் கூறுகின்றார்

(கொழும்பு)

ஊடகவியலாளர் சிவராமின் கொலை விசாரணைகளில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் சரத் லூகொட, தெரிவித்துள்ளார்.

கொலையுடன் சம்பந்தப்பட்ட மேலும் இருவரின் வாக்குமூலம் தற்போது பெறப்பட்டுள்ளதாக கூறிய சரத் லூகொட அவர்களின் பெயர் விபரங்களை வெளியிட மறுத்துள்ளார். அவ்விருவரும் சமுதாயத்தில் பிரபல்யமான முக்கியஸ்தர்கள் எனக் கூறிய அவர், இன்னும் இரு தினங்களில் சிவராமின் படுகொலை தொடர்பாக விசாரணையின் முதல் அறிக்கை பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்படும். அதன் பின்னர் சிவராம் படுகொலையின் புதிய திருப்பங்கள் தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்படும் எனவும் லூகொட தெரிவித்துள்ளார்.

சிவராம் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி இரவு 10.15 மணியளவில் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வைத்து கடத்திச் செல்லப்பட்டு மறுநாள் அதிகாலை பாராளுமன்றத்திற்கு அருகில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (32)

# இலங்கையில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க மின்சாரத்தில் இயங்கும் வாகனம் இறக்குமதி!

## - அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி தெரிவிப்பு

(கொழும்பு)

சூழல் மாசடைவதைத்தடுப்பதற்காக சுற்றுச் சூழலுக்கு ஏற்றவகையில் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுமென சிறிலங்கா வனவள அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

இதற்கு அமைவாக மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டீசல் வாகனங்களை எரிவாயுவில் இயங்கச் செய்வதற்குத் தேவையான மானியங்களை வாகன உரிமையாளர்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் இதனை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதோடு எதிர்காலத்தில் டீசல் வாகனங்களைத் தவிர்த்து எரிவாயுவில் இயங்கும் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

# இரு மீனவர்களை காணவில்லை

(கொழும்பு)

தெஹிவளையில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைக் காணவில்லை என அறிவிக்கப்படுகிறது. கடந்த வெள்ளிக்கிழமை இவர்கள் மீன் பிடிக்கச் சென்றதாகவும் படகு கவிழ்ந்ததில் இவர்கள் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்கள் மரணமடைந்திருக்கலாம் என இவர்களுடன் கூடச் சென்றவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களில் ஒருவர் லோகநாதன் எனும் தமிழர் என்றும் மற்றவர் சிங்களவர் என்றும் தெரியவருகிறது. (32)

# க.பொ.த.சா/த பரீட்சை வினாப்பத்திரத்தில் மாற்றம் ஏற்படுத்த கல்வி அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

கல்விப் பொது தராதர சாதாரணதரப் பரீட்சை வினாப்பத்திரங்களின் கட்டமைப்பு மற்றும் தயாரிப்புகளில் மாற்றங்களைக் கொண்டுவர கல்வி அமைச்சுதீர்மானித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

இம் மாற்றங்கள் பாடவிதானங்களில் நடைபெற மாட்டாது. தற்போது இருக்கும் க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையின் பலதரப்பட்ட பாடங்களுக்குரிய வினாப்பத்திரங்களில் அடங்கும் வினாக்களின் எண்ணிக்கை பதிலளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை, மற்றும் வழங்கப்படும் காலம் தொடர்பாக ஆசிரியர்கள், மாணவர்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்படுகின்றன.

பரீட்சைச் செயற்பாடுகள் மற்றும் அதனுடன் தொடர்பு பட்ட தாக்கங்களைக் குறைத்தலும், பரீட்சை மதிப்பீட்டு, செயற்பாட்டின் பண்புசார் தன்மை, செல்லுபடியான தன்மை மற்றும் நம்பகத்தன்மையைத் தொடர்ந்தும் விருத்தி செய்வதன் மூலம் இம்மாற்றங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்காக ஒவ்வொரு பாடங்கள் தொடர்பாக உள்ள விடயங்கள் மாற்றமின்றி இருப்பதுடன் விருத்தி செய்யும் நோக்கமாகவும், தாக்க நிலைமையைக் குறைக்கும் வகையிலும் இருக்கும்.

மேலும் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் முழுமையான நோக்கம் நிறை வேறக்கூடிய வகையில் பாடவிடயங்களுக்கு உட்படும் முக்கிய விடயங்கள் வலியுறுத்தக்கூடியவாறு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படும்.

விசேடமாக மிகக்குறைந்த மாணவ அடைவுமட்டம் கொண்ட கணிதபாடம் தொடர்பில் பிரதான மூன்று நோக்கங்கள் நிறைவேறக்கூடியவாறு வினாப்பத்திரங்கள் தயாரிக்கப்படும்.

அத்துடன் கணிதபாடத்தை சாதாரணதரப் பரீட்சைக்குப் பின்னரும் கற்கும் மாணவர்களுக்காக இவ்விருத்திகளைத் தெளிவுபடுத்தும் வகையில் துரிதகதியில் பரீட்சைத் திணைக்களத்தினால் மாதிரி வினாப்பத்திரங்கள் வழங்கப்படும்.

க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் அழகியற் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் மேலதிக பாடங்களின் வினாப்பத்திரங்களைத் தயாரித்தல் மற்றும் கட்டமைப்புத் தொடர்பாக மாற்றங்கள் இடம்பெறாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



முத்து ஐயன்கட்டு வலதுகரை தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய

# பொங்கல்விழா

நிகழும் பார்த்திபவருடம் ஆனித்திங்கள் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (12.07.2005) இரவு பொங்கலும், 13.07.2005 புதன்கிழமை பகல் அன்னதான நிகழ்வும் ஏல விற்பனையும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை.

(6184)

# பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிறுவனங்களில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு தகுதியுடைய ஆண்,பெண் இருபாலாரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

**பணிநிலைகள்:-**

01.உதவிக்கணக்காய்வாளர்
02.கணக்காய்வு எழுதுனர்
03.கணக்கு எழுதுனர்

**தகைமைகள்:-**

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம். அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகள்.

02. க.பொ.த-உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

03. க.பொ.த சாதாரணதரத்தில் வணிகப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்

**அகவை எல்லை:**

விண்ணப்ப முடிவு நாளில் 18 அகவைக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:**

ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

**வேண்டுகைக்கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி:**

பொறுப்பாளர், ஆளணிப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை,தமிழீழம்.

**விண்ணப்ப முடிவு நாள்:- 20.07.2005**

*வேண்டுகைகள் சேர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரிகள்:*

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு | ~திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முழங்காவில் | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முள்ளியவளை | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| கிளிநொச்சி | ~விளம்பரப் பணிமனை, ஈழநாதம், யாழ்சாலை,கிளிநொச்சி. |
| பொதுஅஞ்சல் | ~ஒளிர காகிதாதிகள் விற்பனையகம், கந்தசாமி கோவிலடி, |

ஆளணிப்பகுதி,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி.12296)

# சாவு அறிவித்தல்

## சிவஞானசுந்தரம் கஜீபன்

யோகபுரம் மல்லாவி இல-701 ஐப் பிறப்பிடமாகவும் வயம்பை பல்கலைக்கழக இறுதி ஆண்டு மாணவனுமாகிய சிவஞானசுந்தரம் கஜீபன் 06.07.2005 அன்று அகால மரணமடைந்துள்ளார். அன்னார் சிவஞானசுந்தரம் சிவலோக நாயகி ஆகியோரின் அன்பு மகனும், சுபாஜினி (சுவிஸ்), சிவகாந்தி (ஆசிரியர் உயிலங்குளம் அ.த.க பாடசாலை), தயாளன் (வெளிவாரிப்பல்கலைக்கழகம், மட்டக்களப்பு), லோஜினி ஆகியோரின் அன்புச்சகோதரனும், கிருபாகரன் (சுவிஸ்), கவிதா (ஆசிரியை 4 ஆம் யூனிற் அ.த.க பாடசாலை, மல்லாவி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரணியா, அருணன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கனிசிகாவின் அன்புச்சித்தப்பாவும், திரு திருமதி மோசெஸ், திரு திருமதி புவனேஸ்வரன், திரு திருமதி உருத்திரகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பெறாமகனும், திரு திருமதி சிவபாலசிங்கம், திரு திருமதி ஜெகதீஸ்வரன்(லண்டன்) ஆகியோரின் அன்பு மருமகனும், திரு திருமதி சண்முகலிங்கம், திரு திருமதி சிறி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், திருமதி ஐயாத்துரை, திரு வீரசிங்கம், திரு திருமதி காசிநாதர் ஆகியோரின் அன்புமருமகனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல:701 மல்லாவியில் உள்ள அவரது இல்லத்தில் 11.07.2005 திங்கள் காலை 11.00 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் அனிஞ்சியன்குள இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறீர்கள்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(6007)

# தீவிரவாதத்தை வேரோடு வீழ்த்துவோம் மன்மோகன் சிங் சூளுரை

**ஒக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்தில் கௌரவ டாக்டர் பட்டம் பெற்ற பிரதமர் மன்மோகன் சிங்அங்கு உரையாற்றுகையில் தீவிரவாதத்தை வேரோடு வீழ்த்துவோம் என்று சூளுரைத்துள்ளார்.**

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்கனவே ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் படித்து டாக்டர் பட்டம் வாங்கியவர் தற்போது அதே பல்கலைக்கழகம் அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது. கடந்த சனி ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றுக் கொண்டபின் உரையாற்றிய பிரதமர் மன்மோகன் சிங் லண்டன் குண்டுவெடிப்பு சம்பவம் தன்னை அதிர்ச்சி அடையச் செய்ததாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; லண்டன் குண்டுவெடிப்பு சம்பவம் எனக்கு மிகுந்த அதிர்ச்சியையும் கோபத்தையும்/ வேதனையையும் தந்துள்ளது. இந்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இந்தியாவும் ஆளாகியுள்ளது. இந்த தருணத்தில் இங்கிலாந்திற்கு பக்கபலமாக குறிப்பாக லண்டனுக்கு பக்க பலமாக இந்தியா துணை நிற்கும்.

வெறுப்பில் வளரும் தீவிரவாதம் நம் அனைவருக்கும் அச்சுறுத்தலாக உள்ளது. இந்த தீமையை ஒழிக்க சட்டத்தின் ஆட்சியில் நம்பிக்கை கொண்டுள்ள நாம் அனைவரும் கை கோர்ப்போம். இன்று அனைத்து விடயங்களும் உலகமயமாகி வருகிறது. தீவிரவாதமும் அவ்வாறே உலகமயமாகிவிட்டது. பல நாடுகளில் அதன் செயற்பாடுகள் பரவி உள்ளது. எங்கு வேண்டுமானாலும் அது தனது தாக்குதலை தொடுக்கலாம். நியூயோர்க் பாலி மாட்ரிட் அயோத்தி தற்போது லண்டன் என எந்த நகரிலும் தாக்குதலை நடத்த முடியும். உலகம் முழுவதும் பரவியுள்ள இந்த தீமையை வேரறுக்க உலக முயற்சி தேவை எனவும் தெரிவித்தார்.

# வழக்கறிஞர் போராட்டத்தை தீர்க்கக் கோரி தி.மு.க அமைச்சர்கள் பரத்வாஜை சந்தித்தனர்

குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்தங்கள் பற்றி மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜை தி.மு.க. அமைச்சர்கள் நேற்று முன்தினம். சந்தித்து பேசினர். அப்போது வழக்கறிஞர்கள். போராட்டத்தை தீர்க்குமாறு கோரிக்கை வைத்தனர்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மத்திய அரசு திருத்தங்கள் கொண்டு வந்துள்ள நிலையில் இதை எதிர்த்து தமிழ்நாட்டில் வழக்கறிஞர்கள் ஐந்து நாள் போராட்டம் நடத்தினர். இதே போல சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களும் மூன்று நாள் நீதிமன்ற புறக்கணிப்பு போராட்டம் நடத்தினர். இந்த சட்டத்திருத்தம் காரணமாக சாதாரண மக்கள் பாதிக்கப்படுகின்றனர். பொலிசாரும், வருவாய்த்துறையினரும் சேர்ந்து யாரையும் பழி வாங்கலாம் என்று வழக்கறிஞர்கள் சுட்டிக் காட்டினர். இந்தப் போராட்டம் காரணமாக நீதிமன்றப் பணிகள் பாதிக்கப்பட்டு வருகின்றன. எனவே இது தொடர்பாக வழக்கறிஞர்களுடன் விரிவான முறையில் பேசி சுமுகமாக தீர்வு காண வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி கோரிக்கை விடுத்தார். வழக்கறிஞர்களும் நீதிமன்ற புறக்கணிப்பை கைவிட்டு பணிக்கு திரும்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இந்த நிலையில் இது தொடர்பாக மத்திய இணை அமைச்சர்கள் மத்திய சட்ட அமைச்சர் பரத்வாஜை சந்தித்து வழக்கறிஞர்கள் தமிழ்நாட்டில் போராட்டம் நடத்தி வருவதை எடுத்துக்கூறினர். குற்றவியல் நடைமுறைச்சட்டத் திருத்தம் காரணமாக எழுந்துள்ள விளைவுகள் பற்றியும் விளக்கிக்கூறினர். இதற்கு சட்ட அமைச்சர் பரத்வாஜ் பதில் அளிக்கையில், வழக்கறிஞர்களின் கோரிக்கைகளை சுட்டிக் காட்டி சட்ட திருத்தம் தொடர்பாக மறுபரி சீலனை கோரிக்கையை மத்திய அமைச்சரவைமுன் வைப்பேன் என்று உறுதி அளித்தார்.



அண்மையில் அயோத்தில் இடம்பெற்ற தீவிரவாதிகளின் தாக்குதலையடுத்து அப்பகுதியில் சோதனை நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## மாநில உதவித்தொகை அதிகரிக்கப்படும்

-ப. சிதம்பரம்-

இந்திய மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கி வந்த உதவித்தொகைகள் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதியிலிருந்து 100 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது என மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசு வழங்கி வரும் விவசாயக்கடன் தொகை இவ்வருடம் நிதி ஆண்டில் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் கோடி ரூபாய்க்கு வழங்கப்படும் எனவும் அறிவித்தார்.

# இந்திய அணுசக்தி துறைக்கு அமெரிக்கா உதவி

அணுசக்தி துறையில் இந்தியாவிற்கு உதவி அளிக்கப்படும் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தம்மிடம் உறுதி கூறியிருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் கைச்சாத்தான அமெரிக்க இந்திய பாதுகாப்புதுறை ஒப்பந்தத்தில் இருநாடுகளும் ஒத்துழைக்கக்கூடிய துறைகள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை எதிர்ப்பவர்கள் திட்டத்தின் ஆவணத்தை பார்வையிடலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

ஈரான், பாகிஸ்தான், இந்தியா எரிவாயு குழாய்த்திட்டம் பற்றி மன்மோகன்சிங் குறிப்பிடுகையில் இத்திட்டத்தை மறுபரிசீலனை செய்யும் பேச்சுக்கே இடமில்லை. மூன்று நாடுகளும் முடிவெடுத்து விட்டால் அதுவே உறுதியானது எனத் தெரிவித்தார்.

# தனலேந்திரா அணை உடைந்தது 30 இற்கு மேற்பட்டோர் பலி

மகாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள தனலேந்திரா அணை நீர் நிரம்பி உடைப்பு ஏற்பட்டதால் 30 இற்கு மேற்பட்டோர் இறந்திருக்கலாமென இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. அத்துடன் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டிருக்கின்றன எனவும் அம் மாநிலத்தில் கடும் மழை தொடர்ந்ததாலேயே இவ் அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் தொகுதிகள் மறு சீரமைப்பு

தமிழகத்தில் வரும் சட்டமன்ற தேர்தலை புதிய தொகுதி வரையறைப் படி நடத்துவது பற்றி மத்திய அரசு தீவிர பரிசீலனை செய்து வருகிறது.

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடக்க இருக்கிறது. இந்த நிலையில் தமிழ்நாட்டில் சில தொகுதிகளில் அதிக வாக்காளர்கள் உள்ளனர்.

இது போன்ற ஏற்றத்தாழ்வுகளை களைந்து ஒரே சீராக சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர்கள் இருக்க வேண்டும் என்பதற்காக 234 தொகுதிகளையும் மறுசீரமைக்க முடிவு செய்யப்பட்டது.

# மேட்டூர் அணையில் நீர் மட்டம் உயர்கிறது

கர்நாடகத்தில் 'கபீனி' அணை நிரம்பியுள்ளதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு மிக மோசமாக அதிகரித்து வருகிறது. இதன் மூலம் வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடி நீர் வருகிறது எனவும் நேற்றைய கணிப்பின்படி மேட்டூர் அணையில் நீர்மட்டம் 55 அடிக்கு மேல் சென்றுள்ளது என துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## விதையாகிய உம் நினைவுகளுடன்....



கப்டன் அமுதினி
சிவசுப்பிரமணியம் சிவமதி
(முன்னாள் தென்மராட்சி,
மன்னார் மாவட்ட மகளிர்
முன்னணிப்பொறுப்பாளர்)

முளையாக: 26.05.1968
விதையாக: 11.07.1991

கப்டன் தில்லையழகன்
(வினோ)
பாலசிங்கம்.நவரத்தினசிங்கம்

முளையாக:07.03.1972
விதையாக:01.02.1998

ஈழமண்மீட்பிற்காய்
அண்ணன்வழியில்
வீறுநடைபோட்டு
விடுதலைக்கு விதையான -உம்
நினைவுகளுடன்..........


குடும்பத்தினர்

த.முகவரி:
7ம் வட்டாரம்
புதுக்குடியிருப்பு

உரும்பிராய் கிழக்கு
உரும்பிராய்

(சி-12300)

## 13ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தோற்றம் | | வீரச்சாவு |
|---|---|---|
| 05 |  | 11 |
| 08 | | 07 |
| 1972 | | 1992 |

## 2ஆம் லெப்டினன் சுபேந்திரன்

(கிருஷ்ணமூர்த்தி கலாகரன்)

ஆண்டுகள் பதின்மூன்று போனதா? அண்ணா
ஆறவில்லை எம் இதயம்
இன்றுவரை நம்ப முடியவில்லை – நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர் என்று.

வாழ்ந்திடும் காலமெல்லாம்
மறப்போமா உம் முகத்தை
வருந்தி நாம் அழைக்கின்றோம்
திரும்ப வந்து சேர்ந்திடுவீர்.

667, கொத்தம்பியாகுளம்,
துணுக்காய்.

(சி-12299)

தகவல்:
S. சீலன் (தம்பி)

# பாடசாலைகளுக்கிடையிலான கனிஷ்ட மெய்வன்மைபோட்டி; முல்லை.மாவட்ட வீரர் நிரஞ்சன் தங்கப்பதக்கம் வென்றார்

அகில இலங்கை ரீதியில் பாட சாலை மட்டத்தில் நடைபெற்ற கனி ஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் முல்லை மாவட்டத்தை சேர்ந்த நிரஞ்சன் தங்கப்பதக்கத்தையும் கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த தாரணி வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார்.

400 மீற்றர் ஓட்டப்போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த நிரஞ்சன் தங்கப்பதக்கத்தை சுவீகரித் துக் கொண்டார்.

இவர் இத் தூரத்தை 48.96 வினா டிகளில் ஓடி முடித்தார். இவர் எதிர் வரும் 23 ஆம் திகதி கொரியாவில் நடைபெறும் சமாதான விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளவுள்ளார்.

இதேவேளை 18வயதுக்கு உட் பட்டோருக்கான மற்றுமொரு 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் திருமலை மாவட்டத்தை சேர்ந்த றிபான் 49.90 செக்கனில் ஓடி முடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

இதனைவிட 18 வயதுக்கு உட் பட்மகளிருக்கான பரிதவட்டம் வீசும் போட்டியில் 25.4 மீற்றர் வீசி கிளி நொச்சி மாவட்டத்தை சேர்ந்த தாரணி வெள்ளிப்பதக்கத்தை வென் றுள்ளார்.

இவர் ஏற்கனவே குண்டெறிதல் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற் றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நீண்ட இடைவேளையின் பின் கனிஷ்ட மெய்வன்மை போட்டிகளில் வட கிழக்கு மாகாணத்தை சேர்ந்த தமிழ், முஸ்லிம் மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை மொத்தமாக மூன்று தங்கப்பதக்கங்களும்,ஐந்து வெள்ளிப் பதக்கங்களும், நான்கு வெண்கலப் பதக்கங்களும் வடகிழக்கு மாகாணத் துக்குகிடைத்துள்ளன.

# தென்கொரிய சமாதான விளையாட்டுப் போட்டி சித்திவிநாயகர் தேசிய கல்லூரி பங்கேற்கிறது

தென்கொரியாவில் நடைபெறவுள்ள உலகளாவிய சமயங்களுக் கிடையிலான சமாதான விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக மன்னார் சித்திவிநாயகர் தேசியக்கல்லூரி இலங்கையின் சார்பில் கலந்துகொள்ளவுள்ளது.

இவர்கள் எதிர்வரும் வாரத்தில் தமது பயணத்தை மேற்கொள்ள வுள்ளனர். இக்கல்லூரியின் அதிபர். ஆசிரியர்கள் மாணவர்கள் பயணம் செய்வதற்காக மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள் 80 ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார். (18)

# மாகாண மட்டகராத்தே,கிரிக்கெட்போட்டி

வடக்கு-கிழக்கு மாகாண விளை யாட்டுப்போட்டியில் கலந்து கொள் வதற்காககிளிநொச்சி மாவட்ட கராத்தே , கிரிக்கெட் அணிகள் நாளை மறுதினம் மட்டக்களப்புக்கு பயண மாகின்றது.

இதில் கராத்தே போட்டி எதிர்வரும் வியாழக்கிழமையும், கிரிக்கெட் போட்டி சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இப் போட்டிகளில் வடக்கு கிழக் கைச்சேர்ந்த எட்டு மாவட்டங்களின் முன்னணி அணிகள் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முக்கோண ஒருநாள் கிரிக்கெட் போட்டி பாதுகாப்பு குறித்து இந்தியா ஆராய்கிறது



இம்மாத இறுதியில் சிறிலங்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய கிரிக்கெட் அணிக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு பற்றி கண்காணிக்கவென இந்திய அரசு இரு அதிகாரிகளை அனுப்பியுள்ளது. இந்திய உள்நாட்டு. வெளிநாட்டு விவகார அமைச்சை சேர்ந்த இவ்விருவரும் தம்புள்ள கொழும்பு நகர மைதானங்களையும், அதன் சூழலையும் பரிசோதித்து அறிக்கை சமர்ப்பிப்பர்.


இந்திய அணி தங்கியிருக்கும் 11 நாட்களிலும் இந்தஅதிகாரிகள் வீரர்களின் தங்குமிடம், மைதானம் என்பவற்றை கண்காணிப்பர்.

# இந்திய கிரிக்கெட் அணியில் சச்சின் இல்லாதது அதன் பலத்தை குறைத்து விட மாட்டாது

இந்திய கிரிக்கெட்அணியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் விளையாடாது விட்டால் இந்திய அணிக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாது என இந்திய முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் முகமட் அசாருதீன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இந்திய அணியில் இடம் பெற்றுள்ள வீரர்கள் அனைவரும் தமது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் கடும் முயற்சியுடன் விளையாடுவதால் டெண்டுல்கரின் வெற்றிடம் இந்திய அணியின் பலத்தை பாதிக்காது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாள் போட்டி விதிகளில் சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிமுகப்படுத்தியுள்ள பரீட்சார்த்த மாற்றம் கிரிக்கெட் வீரர்களை ஊக்கப்படுத்தும் விடயமாக அமையலாம் எனவும் முகமட் அசாருதீன் தெரிவித்துள்ளார்.



அசாருதீன்

# தொடரை வென்றது சிறிலங்கா



மேற்கிந்தியத்தீவு ஏ.அணியுடனான மூன்றா வதும் இறுதியுமான நான்கு நாள் கிரிக்கெட் போட்டியில் நான்கு விக்கெட்டுகளினால் சிறி லங்கா ஏ அணி வெற்றி பெற்றுள்ளது. இதனால் 2-1 என்ற அடிப்படையில் சிறிலங்கா ஏ அணிக் தொடரை கைப்பற்றியது.

இதேவேளை சிறிலங்கா தலைவர் அணிக் கும்,மேற்கிந்தித்யத்தீவு அணிக்கும் இடையி லான இரண்டு நாள் பயிற்சிப்போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

கொழும்பு என்.சி.சி மைதானத்தில் நடை பெற்ற இப்போட்டியில் சிறிலங்கா தலைவர் அணி முதல் இனிங்சில்382 ஓட்டங்களை பெற் றது.

குமார்சங்கக்கார 109ஓட்டம், திலான் சமரவீர 95 ஓட்டம் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்சில் 110 ஓட்டங்களுக்கு சகல விக் கெட்டுக்களையும் இழந்ததுடன் இரண்டாவது இனிங்சில் 106 ஓட்டங்களை எடுத்தது.

# இவ் வருடத்துக்கான சர்வதேச ஒரு நாள்,டெஸ்ட் போட்டிகளுக்கான நடுவர்கள் அறிவிப்பு



தற்போது இங்கிலாந்தில் நடைபெறும் இங்கிலாந்து- அவுஸ்திரேலிய அணிகள் பங்கு கொள்ளும் நட்வெஸ் கிண்ண ஒருநாள் கிரிக் கெட் தொடர் உட்பட இவ்வருடம் முடியும் வரை நடைபெறும் போட்டிகளுக்கான நடுவர் களின் பெயர்களை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

அதன்படி தற்போது நடைபெற்றுவரும் இங் கிலாந்து அவுஸ்திரேலிய அணிகள் பங்கு பற்றும் போட்டியில் றூடிகர்ஸ்டன், றோஷான் மாநாம ஆகிய இருவரும் பணியாற்று கின்றனர்.

அதன் பின்னர் இரு அணிகளுக்கு மிடையில் நடைபெறும் ஆஷஸ்கிண்ண டெஸ்ட் தொடரில் முதல் இரு போட்டிகளிலும் றஞ்சன் மடுகல்ல, அலீம்தார், றூடி கர்ஸ்டன் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றுவர். ஏனைய மூன்று போட்டிகளிலும் பில்லி பௌடன், றஞ்சன் மடுகல்ல,ஸ்ரீவ் பக்னர், ஆகியோர் பணி யாற்றுவர்.

வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகும் இலங்கை மேற் கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் மைக்புரக்டர்,சைமன் டப்பள், நதீம் கௌரி,ரோனி கில் ஆகியோர் நடுவர்களாகப் பணியாற்றுவர்.

அதனையடுத்து இந்திய அணியும் பங்கேற்கும் முக் கோணத்தொடரில் மேற்கூறப்பட்ட நடுவர்களை விட மேல திகமாக டரில் ஹாபர் இணைத்துக் கொள்ளப்படுவார்.

வரும் ஒக்டோபர் மாதம் சிம்பாப்பேயில் நடைபெறும் நியூசிலாந்து சிம்பாப்வே அணி களுக்கிடையிலான டெஸ்ட்போட்டியிலும் இந்தியாவும் கலந்துகொள்ளும் முக்கோணத் தொடரிலும், மகநாம, அலீம்தார் டரில்ஹாபர், கிறிஸ் புரோட், மார்க்பெண்சன் டரல் கெயா ஆகியோர் கட மையாற்றுவர்.

அதனைத்தொடர்ந்து நடைபெறும் இந்திய சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் மைக் புரக்டர் அலீம் தார் டரில் ஹாபர் ஆகியோர் பங்கேற்பர்.

வரும் நவம்பர், டிசம்பரில் ஆரம்பமாகும் சிறிலங்கா, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கு கிளைவ் லொய்ட் ,அஸாத் ராகுல், ஸ்ரீவ் பக்னர் ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

# மேஜர் கிண்ணி வெற்றி கிண்ணக் கால்பந்து போட்டி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதி மேஜர் கிண்ணி அவர்களின் 13ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் மேஜர் கிண்ணி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்திற்கான போட்டியும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் விளை யாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாவலன் தலை மையில் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட இடத்தில் நேற்று நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை மேற் [illegible]ளைப் பணிய[illegible] தளபதிகளில் ஒருவ [illegible]வன் ஏற்றிவைக்க, அதனைத் [illegible]மிழீழ தேசியக்கொடியினை குட்டி சிறி மோட்டார் படையணியின் சிறப்புத்தளபதி லெப்.கேணல் கோபால் ஏற்றிவைத்தார். அத னைத் தொடர்ந்து பொதுமாவீரர் படத்திற்கான ஈகச்சுடரினை வடபோர்முனைத் தளபதிகளில் ஒருவரான முகுந்தன்ஏற்றிவைத்தார். மலர் மாலையை மேற்குக்கட்டளைப் பணியக தளபதிகளில் ஒருவரான வாகீசன் அணிவித்தார். மேஜர். கிண்ணியின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினையும் ,மலர் மாலையினையும் மேஜர். கிண்ணியின் தாயார் ஏற்றி அணிவித்துவைத்தார். அதனைத் தொடர்ந்து மேஜர். கிண்ணி ஞாபகார்த்த நினைவுவரையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் நகுலன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து மேஜர்.கிண்ணி ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுக் கிண்ணத்திற்கான போட்டி வடபோர்முனை அணிக்கும்,மத்தியமுனைஅணிக்கும் இடையே நடைபெற்று வடமுனை அணி வெற்றி பெற்று மேஜர்கிண்ணி 2005 ஆம் ஆண்டு நினைவு சுற்றுக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. இச்சுற்றுக்கு கிண்ணத்தை லெப்.கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி லெப்கேணல் கோபால் வழங்கிக்கௌர வித்தார். (கு)

# பேர்முடாவுக்கு உலகிண்ண வாய்ப்பு

2007 ஆம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டி களில் பங்கேற்க அயர்லாந்தில் நடை பெற்ற தகுதிகாண் சுற்றுப் போட்டித் தொடரில் ஸ்கொட்லாந்து, பேர்முடா, அயர்லாந்து, கனடா ஆகிய நாடுகள் தகுதிபெற்றுள்ளன. இச் சுற்றுத் தொடரில் அமெரிக்கா, டென்மார்க், நெதர்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகள் அரை யிறுதிக்குத் தகுதி பெற்ற போதிலும் இறுதிப் போட்டியில் அவைகள் தகுதிபெறவில்லை.



## சிந்தனைக்கு



இராணுவ ஆதிக்கத்திற்கும், அழுத்தத் திற்கும் புலிகள் இயக்கம் என்றுமே விட்டுக் கொடுத்ததில்லை; கொண்ட கொள்கையில் நாம் என்றுமே வளைந்து கொடுத்ததில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-07-2005


தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## கண்ணியமற்றவர்கள்...!

சிறிலங்கா ஆட்சியாளர்கள் என்றுமே தமிழர் தரப்புடன் கண்ணியமானவர்களாக, வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களாக நடந்து கொண்டதில்லை. இந்த வகையிலேயே திருமலை புத்தர்சிலை விவகாரத்திலும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

திருமலை பொதுவிளையாட்டு மைதானத்தில் இரவோடி ரவாக வைக்கப்பட்ட புத்தர்சிலை அகற்றுவதற்குச் சட்டத்தின் மூலம் தாம் நடவடிக்கை எடுப்பதாக சனாதிபதி சந்திரிகா அளித்த உறுதி மொழியை அவர் நிறைவேற்றாது ஏமாற்றியுள்ளார்.

இது தொடர்பாக திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை வெளியிட்ட அறிக்கையில் சனாதிபதியால் அனுப்பப்பட்ட அமைச்சர் குழு சட்டபூர்வமாக புத்தர்சிலை அகற்றப்படுவதற்குச் சனாதிபதியால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி கூறியிருந்தது என்று தெரிவித்துள்ளதோடு, தற்போது அதற்கு மாறான நிகழ்வுகள் திருமலை மாவட்டத்தில் நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

பேச்சுவார்த்தை- காலஅவகாசம் என்பன போன்றவை போராட்டங்களின் எழுச்சியை மழுங்கடிப்பதற்கானது என்பது தமிழ் மக்களுக்குத் தெரியாதவையல்ல. இது குறித்த முன் அனுபவம் தமிழ் மக்களுக்கு இல்லாமலும் இல்லை. ஆனால் அவ்வாறு இருந்தும் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பேச்சுவார்த்தைக்கும் கால அவகாசம் வழங்குவதற்கும் தயாராக இருந்துள்ளனர் என்றால் அவர்கள் பலவீனமானவர்களாக உள்ளனரா? போராடும் திறனற்றவராகி உள்ளனரா?

அவ்வாறு இல்லை. நீண்டதொரு தொடர் யுத்தத்தின் பின்னர் யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது. இதற்குச் சர்வதேசத்தின் ஆதரவும், அனுசரணையும் உண்டு. இது குழப்பத்திற்கு உள்ளாகாமல் பாதுகாப்பது என்பது அவசியமானது. ஆனால் இதற்காக மேற்கொள்ளப்படும் விட்டுக்கொடுப்புக்கள், காட்டும் சகிப்புத்தன்மை பலவீனமானதொன்றாகக் கருதிப் பார்க்கப்படுமானால் அதன் விளைவுகள் பாரதூரமானதாகவே இருக்கும். ஆனால் தமிழ்த் தரப்பு யுத்தத்திற்குக் காரணமாகியது என்ற குற்றச்சாட்டினை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை என்பது மட்டுமே தற்போதைய நிலையாகும்.

சிறிலங்கா அரச தரப்பும், சிங்களப் பேரினவாதிகளும் தமிழ் மக்களை இன வன்முறை மற்றும் அரசபயங்கரவாதம் மூலம் அடக்கி ஒடுக்கிவிலாம். தமது வழிக்குக் கொண்டு வந்துவிடலாம் என்றே நீண்ட காலமாக கருதிவருகின்றது. அதற்கேற்பவே செயற்பட்டதுமுண்டு.

ஆனால் இது தவறான சிந்தனை என்பதை கடந்தகாலத்தில் தமிழ்மக்கள் அவர்களுக்குப் புரியவைத்துள்ளார்கள். ஆரம்பத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக எதற்கும் கைகளைத்தூக்கியவர்கள் பின்னர் தமக்கும் திருப்பி அடிக்கப்படும் என்பதைப் புரிந்தும் கொண்டனர். அவ்வாறு இல்லாது விட்டால் சிங்கள ஆட்சியாளர்கள் படியிறங்கி யுத்தநிறுத்தம் ஒன்றை செய்து கொள்ள முன்வந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் யுத்தநிறுத்தம் மூன்றரை ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் யுத்தத்தின் பாதிப்புக்கள் சிங்கள மக்கள் மனங்களில் மறைந்துவிட்ட நிலையிலும் மீண்டும் அராஜகத்தை கட்டவிழ்த்துவிட அவர்கள் தயாராகிவிட்டதுபோல் தெரிகின்றது. இதற்கு சிறிலங்கா ஆட்சியாளர்களினதும், ஆயுதப்படையினரின் ஆசீர்வாதமும் அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுமுள்ளது. அவ்வாறு இல்லாது விட்டால் திருமலையில் பதற்றதைத் தோற்றுவிக்கும் சிங்களக் காடையர்களின் செயற்பாடுகளுக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்திருக்க மாட்டாது. அதாவது சிங்கள ஆட்சியாளர்கள் எவருமே நாட்டிற்காகச் சேவை ஆற்றுபவர்காளாகவும் இல்லை. வரலாற்றில் இருந்து பாடம் படிப்பவர்களாகவும் இல்லை. எவ்வேளையிலும் ஆட்சி அதிகாரத்திற்காக போட்டியிடுபவர்களாகவும், இனவாத வெளிப்பாடு கொண்டவர்களாகவுமே இருந்துள்ளனர். அவ்வாறு இல்லாதுவிடில் விசமத்தனமாக இன வன்முறையைத் தூண்டுவதற்காகவே வைக்கப்பட்ட புத்தர்சிலையை சந்தடியின்றிச் சனாதிபதி சந்திரிகாவால் அகற்றியிருக்க முடியும்.

ஆனால் அதற்கு அவர் தயாராக இல்லை. தமிழ் மக்களின் எழுச்சியை தான் பெற்றுக்கொண்ட கால அவகாசத்தின் மூலம் மழுங்கடித்து விட்டதாக அவர் கருதுகின்றார் போல் தெரிகின்றது. ஆனால் தமிழ் மக்களுக்கு கிட்டும் இத்தகைய ஏமாற்றங்கள் சிங்களப் பேரினவாதிகளும், ஆட்சியாளரும் விரும்புவது போன்று இலங்கை ஒரே நாடாக இருப்பதற்கு உதவப்போவதில்லை.

# சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி காரணமாக இராணுவத் தளபாட இறக்குமதிக்குத் தடையாம்

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக இராணுவத் தளபாடங்களின் இறக்குமதிகளுக்கு அரசாங்கம் தற்காலிக தடை ஒன்றை நடைமுறைப்படுத்த முடிவு செய்துள்ளது.

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்பட வேண்டிய இராணுவத் தளபாடங்கள் குறித்து நன்கு ஆராய்ந்ததன் பின்னரே, இந்தத் தடை உத்தரவை நீக்குவது குறித்து ஆராயப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

தனித்தனியாக ஒவ்வொரு ஆயுதப்படைகளினதும் அவசர தேவை, இராணுவத் தளபாடங்களின் தராதரத் தன்மை போன்ற விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக தடை குறித்து விளக்கத்துடன் திறைசேரியினால் இராணுவம், கடற்படை, ஆகாயப் படை மற்றும் பொலிஸ் தரப்பினருக்கு சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இதில் முக்கியமாக கடற்படைத் தளபதியால் பரிந்துரைக்கப்பட்ட பிரித்தானிய தயாரிப்பான படையினரை ஏற்றியிறக்கும் 36 பில்லியன் ரூபா பெறுமதியான சேர் கலகாட் என்ற கப்பலும் உள்ளடங்கும் எனக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலை கொள்வனவு செய்வதன் மூலம் கொழும்பில் இருந்து பெருமளவு படையினரை யாழ்ப்பாணத்துக்கு ஏற்றியிறக்க முடியுமென கடற்படை தளபதி தெரிவித்திருந்தார்.

இந்தக்கப்பலானது காங்கேசன் துறை துறைமுகத்தில் நங்கூரமிட முடியாது என்பதை காரணம் காட்டியே கடற்படை தளபதியின் கருத்து நிராகரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்தக்கப்பலை இயக்குவதன் மூலம் கடற்படைக்கு பாரிய நிதிப்பிரச்சினை ஏற்படும் என்ற காரணத்தினாலேயே இந்த நிராகரிப்பு மேற்கொள்ளப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சேர் கலகாட் கப்பலுக்கு பத்து நாட்களுக்கான எரிபொருள் செலவானது 180 மில்லியன் ரூபாய்களாகும் அதாவது நாள் ஒன்றுக்கான எரிபொருள் செலவு 18 மில்லியன் ரூபாய்க ளாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கடற்படையினரின் மாதாந்த சம்பளங்களுக்காக 400 மில்லியன் ரூபா செலவாகும் நிலையில் இந்தக்கப்பலுக்காக மாதம் ஒன்றுக்கு 558 மில்லியன் ரூபாய்களை செலவிடுவது இயலாத காரியம் என்பதன் காரணமாகவே கடற்படைத் தளபதியின் கொள்வனவு கட்டளை நிராகரிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவல்கள் குறித்து இராணுவப் பேச்சாளர், தயா ரத்நாயக்கா, மற்றும் வான்படை தளபதி எயர் மார்சல் டொனல்ட் பெரேராவுடன் செய்தியாளர்கள் தொடர்பு கொண்டு வினவிய பொழுது, உடனடியாக தமது கருத்துக்களை தெரிவிக்க முடியாத நிலையில் தாம் இருப் பதாகத் தெரிவித்தனர்.

# தென்பகுதியில் இரு வாகன விபத்துக்கள் 12 பேர் உயிரிழப்பு; பலர் படுகாயம்

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் ஏற்பட்ட இரு வாகன விபத்துச் சம்பவங்களில் 12 பேர் பலியானதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

கம்பஹா வனிதேரியர் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பத்துப் பேர் பலியானார்கள். நேற்று முன்தினம் இரவு 11.00மணியளவில் வனிதேரியர் சிலுவைச் சந்தியில் வான் ஒன்றும் பாரவூர்தி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் வானில் பயணம் செய்த பத்துப் பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் எட்டுப் பேர் பெண்களாவர். விபத்து ஏற்படும் போது வானில் 17 பேர் பயணம் செய்துள்ளார்கள். காயமடைந்த மூன்று பேர் கம்பஹா ஆதார வைத்தியசாலையிலும் மூன்று பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இரண்டு சிறுவர்களும் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் அநுராதபுரத்தில் சமய நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்பும்போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

விபத்தையடுத்து பாரவூர்திச் சாரதி தப்பியோடியுள்ளார். இவர் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த விபத்தில் காயமடைந்த பாரவூர்தி உதவியாளர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பாரவூர்தி அதிகரித்த வேகத்தில் வந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பொலன்நறுவை கெங்கராகொடையில் நேற்று இடம்பெற்ற மற்றொரு வாகன விபத்தில் இருவர் உயிரிழந் தனர். தனியார் பேருந்து ஒன்றும் முச்சக்கரவண்டியும் மோதியதால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் ஆறு பேர் காயமடைந்தனர். வீதியின் வளைவில் இந்த முச்சக்கர வண்டி பேருந்தை முந்திச் செல்ல முற்பட்ட போதே எதிர்த்திசையில் வந்த பேருந்துடன் மோதியுள்ளது.

# களுத்துறையில் தீ விபத்து; இரசாயன தொழிற்சாலை நாசம்

(களுத்துறை)

களுத்துறை கேஹனப்பிட்டிய பிரதேசத்திலுள்ள இரசாயனத் தொழிற்சாலையொன்றில் நேற்றுக் காலை ஏற்பட்ட தீ விபத்தில் தொழிற்சாலை முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். கொழும்பு தீயணைப்புப் படைத் தலைமை வீரர்கள் தீயைக் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். இத்தீவிபத்தின் காரணமாக தொழிற்சாலையில் ஏற்பட்ட சேத விபரங்கள் மதிப்பிடப்படவில்லை.

# அமைச்சுப்பொறுப்புக்களை தம்மிடம் வழங்குமாறு சு.க.அமைச்சர்கள் சனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஜே.வி.பி. அரசாங்கத்தில் இருந்து விலகிய பின் வெற்றிடமாக உள்ள நான்கு அமைச்சுக்களையும் தங்களுக்கு வழங்குமாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் மற்றும் பிரதி அமைச்சர்களும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கேட்டுள்ளனர்.

அமைச்சர்களான தி.மு. ஜயரத்ன, சரத் அமுனுகம, மைத்திரிபால சிறிசேன, டிலான் பெரேரா, மகிந்தானந்த அளுத்கமகே, சாலிந்த திஸாநாயக்க போன்றவர்கள் இந்த அமைச்சுப் பதவிகளை தங்களுக்கு வழங்குமாறு சனாதிபதியைக் கேட்டுள்ளனர்

இவர்களின் இக்கோரிக்கைகள் குறித்து சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா இதுவரை எந்த முடிவுகளையும் வெளியிடவில்லை யென கொழும்பில் இருந்து வெளி வரும் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜே.வி.பி.யினரை மீண்டும் அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும்

### - ஆளும் கட்சித்தரப்பில் வலியுறுத்து

(கொழும்பு)

ஜே.வி.பியினரை மீண்டும் அரசாங்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆளும் கட்சித்தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது. பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நடந்த சிரேஷ்ட அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மாநாட்டிலேயே இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜே.வி. பி.அரசாங்கத்தில் இருந்து விலகியதால் ஐக்கிய தேசியக்கட்சியின் வளர்ச்சி முன்னரைவிட அதிகரித்துள்ளது.

மீண்டும் ஜே.வி. பி.யியை இணைத்துக்கொண்டால் ஐக்கிய தேசியக்கட்சியின் வளர்ச்சியை தடுக்க முடியுமென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இம்மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐ.தே.க.வின் மக்கள் சக்திப் பேரணியில் நேற்று ஜே.வி.பி ஆதரவாளர்கள் பங்கேற்பு

## சிவப்பு உடைகளை எறிந்து பச்சை உடை அணிந்தனர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் "ஜனபல மேயும" என்ற மக்கள் சக்திப் பேரணிநேற்றுஒன்பதாவது நாளை நிறைவுசெய்துள்ளது.

இதன் அடிப்படையில் நேற்று பேரணி களுத்துறையில் இருந்து பாணந்துறை வரையும் நடத்தப்பட்டுள்ளது.

இந்தப்பேரணியின்போதுஜே.வி.பி உறுப்பினர்கள் சுமார் 300 பேர் வரை தமது சிவப்பு ஆடைகளை களைந்து பச்சை நிற ஆடைகளை அணிந்து ஜே.வி.பி க்கு எதிரான கோசங்களை எழுப்பியமை முக்கிய சம்பவமாக இருந்தது.

தாம் பல ஆண்டுகளாக ஜே வி பியுடன் இணைந்திருந்து அதன் செயற்பாடுகளில் அதிருப்தியுற்ற நிலையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்ததாக ஜே.வி.பி யின் முக்கிய ஆதரவாளர் தெரிவித்தார். தாம் வெய்யிலிலும் மழையிலும் கட்சிக்காக பாடுபட்ட நிலையில் தமது தலைவர்கள் செல்வவிருந் தகங்களில், சிகை அலங்காரங்களில் ஈடுபடுவதுடன், பெருந்தொகையான பணத்தை கையடக்க தொலை பேசிகளுக்காக செலவழித்து வருவ தாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

தமதுதலைவர்கள் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டமக்களை கருத்திற கொள்ளாமல் சுகபோக வாழ்க்கையைஅனுபவித்துக் கொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

நேற்றைய பேரணியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித்தலைவர் கரு ஜெயசூரிய, பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன உட்பட்டோர் பங்கேற்றனர். (32)

# புலிகளின் பயணபாதுகாப்புகுறித்து இன்று கொழும்பில் முக்கிய சந்திப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கிழக்கு பயண பாதுகாப்பு விடயம் குறித்து இன்று போர் நிறுத்த கண்காணிப்புக்குழுத்தலைவருக்கும் சிறிலங்காவின் சமாதான செயலகப் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவிற்கும் இடையில் முக்கிய சந்திப் பொன்று இடம்பெறவுள்ளது.

வன்னியில் இருந்து கிழக்கிற்கும் கிழக்கில் இருந்து வன்னிக்கும் தமது தளபதிகள், போராளிகள் சென்று வருவதற்கு பாதுகாப்பு வழித் துணையை அரசினால் தரமுடியுமா எனக் கேட்டு புலிகளால் அரசுக்கு முன்வைக்கப்பட்ட காலக்கெடு எதிர் வரும் வியாழக்கிழமை முடிவடைகின்றது.

இந்த நிலையில் இது தொடர்பில் அரசிடம் இருந்து இன்னும் தெளிவான பதில் புலிகளுக்கு வழங்கப்படாத நிலையில் இன்று இச் சந்திப்பு இடம் பெறுகின்றது.

இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்: இன்று சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது. என்ன முடிவு எடுப்பது என்பது அரசிடம்தான் உள்ளது என்றார்.

# பொதுத்தேர்தலை விரைவில் சனாதிபதி நடத்தவேண்டி வரலாம் !

ஐக்கிய தேசியக் கட்சி நடத்தி வரும் மக்கள் சக்திப் பேரணிக்கு அதிகரித்து வரும் ஆதரவையடுத்து பொதுத்தேர்தல் ஒன்றை நடத்த வேண்டிய தேவை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு ஏற்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதித் தேர்தலை உடன் நடத்துமாறு வலியுறுத்தி இப்போராட்டம் நடத்தப்படுகின்ற போதும் சனாதிபதி சந்திரிகா அடுத்த ஆண்டு இறுதியிலேயே சனாதிபதித் தேர்தலை நடத்துவது என்பதில் உறுதியாக உள்ளார். இந் நிலையில் பாராளுமன்றத்தில் சிறுபான்மைப் பலத்துடன் இருக்கும் அரசாங்கத்தை உடனடியாக கவிழ்க்கும் நடவடிக்கையில் ஐ.தே.க ஈடுபடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது

இதனால் சனாதிபதி சந்திரிகா பொதுத் தேர்தலை நடத்த முற்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை அனைத்து மாவட்டங்களிலும் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர் கொள்ளும்வகையில் ஆளும் கட்சி செயற்பாடுகளை ஆரம்பித் துள்ளதாக சுட்டிக்காட்டும் அரசியல் வட்டாரங்கள் விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறலாம் எனத் தெரிவிக்கின்றன (32)

## படையத்...

படையத்தொடக்கப் பயிற்சிக் கல்லூரியின் போராளி நிலவன் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் இக் கல்லூரியின் போராளிகளால் உருவாக்கப்பட்ட " அக்கினிப் பிரசவிப்பு," "10ஆம் ஆண்டு பணித் தொகுப்பு" ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. படையத் தொடக்கப் பயிற்சிக் கல்லூ ரியைச் சேர்ந்த சிறப்புத் தளபதி கேணல் ஆதவன் இந் நூல்களை வெளியிட்டு வைக்க, தேசியத்தலைவர் அவர்கள் அவற்றைப் பெற்றுக்கொண்டார்.

இப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிகளை வழங்கி வரும் ஆசிரியர்களுக்கு இந் நிகழ்வின் போது தேசியத்தலைவர் அவர்கள் பரிசில்களையும், சான்றிதழ்களையும் வழங்கிக்கொளரவித்துள்ளார்.

# தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பு இல்லையாம் சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

(திருகோணமலை)

திருமலை உப்புவெளியில் விடுதலைப்புலிகள் மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் சம்பந்தம் கிடையாது எனசிறிலங்கா இராணுவத்திற்கு பேச்சாளரான பிரிகேடியர் தயா ரட்ணாயக்கா தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் எம் மீது சாட்டும் குற்றச்சாட்டுக்களினால் நாம் ஆச்சரியப்படவில்லை. இந்தச் சம்பவத்திற்கும் எங்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்று கூறுவதில் உண்மை கிடையாது. புலிகளின் இந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் முழுமையாக மறுக்கின்றோம். அவர்கள் சொல்வது போல் நடைமுறையில் இராணுவம் எந்தச் சாலைத் தடுப்பிலும், சோதனையிடுவதில் நேரடிப் பொறுப்பு கிடையாது. அனைத்து வாகனங் களும் பொலிசாரால் சோதனையிடப்படுகின்றது. இதில் இராணுவம் சம்பந்தப்படவில்லை. என்று அவர் தெரிவித்தார்.

## லண்டன்...

கைது செய்யவேண்டுமென ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினரான அத்துரலியே ரத்ன தேரர் கேட்டுள்ளார். இதேவேளை ஜே.வி.பியும் லண் டன் குண்டு வெடிப்புக்கள் தொடர்பில் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட்ட அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென கோரியுள்ளது.

## இரு...

மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தின் போது அங்கிருந்த அனைவரை நோக்கியும் துப்பாக்கிச் சூடு நடத்திய போதும இருவர் காயமெதுவுமின்றித தப்பியுள்ளனர்.

சம்பவம் நடைபெற சில நிமிடங்களுக்கு முன்னரே போராளிகள் இருவரும் அந்த இடத்திற்கு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலை நடத்திவிட்டு வாகனம் வெளியேறியபோது வாகனத்தைத் தடுக்க முயன்றவர்கள் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. எனினும் எவருக்கும் காயமேற்படவில்லை: தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனத்தில் W.P 2649 எனும் இலக்கத்தகடு பொருத்தப்பட்டிருந்தாகவும் வாகனத்தின் முன்பகுதியில் வேப்பமிலை கட்டப்பட்டிருந்தாகவும் நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

## வித்துடல்கள்...

கும்பல் ஒன்றின் தாக்குதலுக்குள்ளாகி நால்வர் கொல்லப்பட்டும் ஒருவர் காயமடைந்தும் உள்ளனர். சமாதான ஒப்பந்தத்திற்கு அமைவாக அரசியல் நடவடிக்கைக ளில் ஈடுபட்டிருந்த நிராயுதபாணிகளான விடுதலைப் புலிகளின் மீது திட்டமிட்ட அடிப் படையில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செயல் விடுதலைப்புலிகளை யுத்தத்திற்கு அழைக்கும் செயலாகும். இந்நடவடிக்கை முற்றிலும் சமாதானத்துக்கு எதிரான சக்திகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஒரே பாதுகாப்பு அரணாக உள்ள விடுதலைப் புலிகள் மீதான இத்தகைய தாக்குதல்கள் நிச்சயமாக சமாதானத்தை இல்லாதொழிக்கும். எனவே இந்த மோசமான சதிகார நடவடிக்கையைக் கண்டித்து இன்று முதல் வித்துடல்கள் விதைக்கப்படும் வரை பூரண கதவடைப்பின் மூலம் எம் ஒன்றுபட்ட எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவிப்போம். இவ்வாறான நடவடிக்கை தொடராதிருக்க வேண்டுமெனில் ஒன்றுபட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கை மூலமே இவற்றுக்கு முடிவுகட்ட முடியும்.

திருமலை நகரம் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இச் செயலுக்கு சிறிலங்கா அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். யுத்தசூழலைவிட சமாதானச் சூழலே எமக்கு மிகப் பெரிய ஆபத்தைத் தந்துகொண்டிருக்கிறது. எனவே பாடசாலைகள், அரச நிறுவனங்கள், வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், போக்குவரத்துக்கள் யாவும் பூரண மாக நிறுத்தப்பட்டு அமைதி யாக, வன் முறைக்கு இடங்கொடுக்காது எம் எதிர்ப்பை அகிம்சை வழியில் தெரிவிப்போம்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## போராளிகள்...

சேர்ந்த டிக்கான், இளம்புலி, தேசிய துணைப்படைவீரர் விஜேந்திர ராசா, நாட்டுப்பற்றாளர் பாபு ஆகியோர் கொல்லப்பட்டனர் என்ற விபரத்தையும் எழிலன் வெளியிட்டார்.

எழிலன் மேலும் தெரிவித்ததாவது; " அண்மையில் கடற்படையினர் கருவண்ணன் என்ற எமது போராளியைக் கடலில் பயணம் செய்கையில் பிடித்தனர். இவரை பிளான்டின் பொயின்ட் இராணுவ முகாமில் வைத்து விசாரணை செய்தனர். அப்போது இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் கருவண்ணனைத் தாக்கியதுடன், இன்னும் ஒரு மாதத்தினுள் போராளி டிக்கானையும் வேறு இரண்டு பேரையும் கொல்வோம் என்று கருவண்ணனிடம் கூறியுள்ளனர். கருவண்ணன் விடுதலையானதும் தம்மிடம் இராணுவப் புலனாய்வு அதிகாரி விடுத்த இப்பயமுறுத்தல் பற்றித் தெரிவித்தார். நான் உடனே இது பற்றி திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந் தேன். இப்பயமுறுத்தல்படி டிக்கான் மற்றும் இரண்டு போராளிகளுக்கும் ஏதேனும் நடைபெற்றால் அதற்கு இராணுவமே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்றும் கண்காணிப்பக்குழுவிற்குச் செய்த முறைப்பாட்டில் தெரிவித்திருந்தேன்.

இது பற்றி விசாரணை நடத்துவதாக கண்காணிப்புக் குழுவினர் அப்போது உறுதியளித்திருந்தனர். அன்று கருவண்ணனுக்கு இராணுவப் புலனாய்வு அதிகாரி அச்சறுத்திய படியே நேற்று நடந்து விட்டது. ஆயுதங்களுடன் வந்த கோஷ்டி தாக்குதலை நடத்தியிருக்கின்றது. போராளிகள் டிக்கானும், இளம்புலியும் துணைப் படைவீரர் விஜேந்திரராசாவும் நாட்டுப் பற்றாளர் பாபு ஆகியோரும் கொல்லப் பட்டுள்ளனர். தாக்குதலை நடத்தியவர்கள் திரும்பிச் செல்லும் போது அவர்கள் சென்ற வாகனத்தைப் பொலிசார் மறித்துள்ளனர். ஆனால் அங்கு நின்ற இராணுவத்தினர் அவ்வாகனத்தைச் செல்ல அனுமதித்துள்ளனர். எனவே நேற்று இடம் பெற்றதாக்குதல், நான்குபேர் கொல்லப்பட்டமை அனைத்துக்கும் இராணுவமே முழுப்பொறுப்பும் ஏற்கவேண்டும் என்று நான் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்குச் செய்த முறைப்பாட்டில் வலியுறுத்தியுள்ளேன் இவ்வாறு எழிலன்தெரிவித்தார். (25)

## சர்வதேச...

வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் நான் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். உண்மையிலேயே நாங்கள் இந்த மனித உரிமைச் செயலகத்தை எங்களுடைய தேசத்திலே உருவாக்கியதென்பது எமது தேசத்தின் வரலாற்றின் முக்கியமானதொரு நிகழ்வாகவே நாங்கள் பார்க்கின் றோம். ஏனெனில் தமிழீழ மக்கள் தமது மனித உரிமைகளுக்காகவும், தமது அடிப்படை உரிமைகளுக்காகவும் நீண்ட ஒரு கொடிய போரை சந்தித்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் எமது மக்களுடைய நிலைப்பாடுகளை அவர்கள் மீதான மனித உரிமை மீறல்களை உலக அரங்கிலே எடுத்துச் சொல்வதற்கான ஒரு கட்டமைப்பு கடந்த காலங்களில் இருக்காதது துரதிர்ஷ்டமு.

ஏனெனில் உண்மையாகவே மனித உரிமை மீறல்களுக்கு உட்பட்டு அதனால் தாக்கப்பட்டு அதன் விளைவாகவே இங்கே ஒரு போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. ஆனால் இப்போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற சூழலில் அந்த மனித உரிமை மீறல்களை எவர்கள் புரிந்து கொண்டிருக்கின்றார்களோ அவர்களே அதற்கு மாறான கருத்தைச்சர்வதேச அளவில் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் விடுதலைக்காகப் போராடுகின்ற அமைப்புப் பற்றிய தவறான கருத்துக்களையும் உலக அளவில் அவர்கள் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்தக் காலகட்டத்தில் இப்படியான ஒரு அமைப்பை உருவாக்கி நிறைய சாதனைகளைப் படைத்திருக்கின்றார்கள்.

ஏனெனில் எமது தேசத்தைப் பற்றிய சர்வதேச அபிப்பிராயத்தை மாற்றும் செயற்பாட்டில் இந்த செயலகத்தின் செயற்பாடு பெரும் பங்கு வகித்திருக்கின்றது.

ஒரு பெரிய நிகழ்வுகள் நடைபெறும் போது குறிப்பிட்ட காலத்துள் உலகம் அதை மறைப்பது வழமை. ஆனால் நாங்கள் எங்களது தேசத்திலே நடைபெற்ற நிகழ்வுகளை மறக்கவிடாமல் இருக்க வேண்டும். இதற்கான ஒரு வலிமையான இனமாக நாங்கள் தோற்றம் பெற்றிருக்கின்றோம். எங்களுடைய தேசத்தில் நடந்த சில சம்பவங்கள் மனித உரிமை மீறல்களை உலகம் அறிந்துகொள்வதற்காக நாங்கள் ஏதோ ஒரு வகையில் செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டியதேவை எங்களுக்கு இருக்கின்றது. ஏனெனில் எமது மக்களுடைய அடிப்படை உரிமைகளை நாங்கள் இது வரை முழு அளவில் மீட்டுக்கொள்ளவில்லை. இந்தச் செயலகம் ஆரம்பமானதன் பின் நாம் பல நாடுகளுக்கு விஜயம் செய்து அங்கிருந்த உயர்மட்டக் குழுக்களை சந்தித்த பொழுது இச்செயல கத்தின் செயற்பாடுகள் பற்றி தமது மகிழ்ச்சியை தெரிவித்தார்கள்.

உண்மையிலேயே இன்று சிறிலங்கா அரசாங்கமும், வேறுபல சக்திகளும் இன்னும் மனித உரிமைகள் என்ற விடயத்தைத் தான் கையில் எடுத்துக்கொண்டு உலக அளவில் எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் சில நடவடிக்கைகளை நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் தான் மிகக் கொடூரமான மனித உரிமை மீறல் எல்லாம் நடந்தன. ஆனால் சமாதான காலம் எனப்படும் இந்தக் காலத்தில் கூட எங்களுடைய மக்களின் மனித உரிமைகள் மீறப்படுவதென்பது இயல்பாகவே நாளாந்தமே நடந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த மூன்றரை வருட யுத்தநிறுத்த காலத்தில் எங்களுடைய மக்கள் மத்தியில் எந்த ஒரு செயற்பாடுமே நடைபெறவில்லை. அதனால் எமது மக்கள் கொந்தளிப்பான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றார்.

நேற்றுக்காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி மனித உரிமை செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன்,வடக்குக் கிழக்கு மனித உரிமைகள் செயலக இயக்குநர் கருணாரத்தினம் அடிகளார் மற்றும் மனித உரிமை செயலக உறுப்பினர்கள், பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை இவ் ஓராண்டில் மனித உரிமை செயலகம் ஆற்றிய பணிகள் பற்றிய தொகுப்புப் புத்தகமும் வெளியிடப்பட்டது. (ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது